[illegible]

[illegible] 4 [illegible] 11


JL
M211,M27 SN
N38·11·11.
186965

4:7 | 4647

REGD No. M. 3843.

-JUL 1938

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கக. } திட்டை வெகுதானிய—ஆனி 1938 ஜூலை 1௳ { திங்கள் கக

| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | திருத்தென்குடித்திட்டைத் திருத்தலவரலாறு | 233 |
| 2. | இந்திய இலக்கியக் கழகம் ... | 237 |
| 3. | எண்ணும் எழுத்தும் .... | 247 |
| 4. | மரணமும் மரணபயம் நீங்கும் வழியும் ... | 250 |
| 5. | பெண்கல்வி .... | 259 |
| 6. | விளைத்த சூளினை விளைத்த வியாதர் .... | 263 |
| 7. | இல்வாழ்க்கையும் மாதர் கடமையும் ... | 267 |
| 8. | கடவுளும் சமயமும் ... | 268 |
| 9. | ஸ்ரீ காசியாத்திரை விளக்கம் ... | (29–32) |

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— மங்கள விநாயகர் திருக்கோயில் மன்னார்களால் அழகாகக் கட்டப்பெற்று வைகாசி உ௰ல அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம் செய்யப் பெற்றது.

கருர்திட்டைக்குடி ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ வசிஷ்டேசுவர சுவாமி வைகாக மஹோத்ஸவங்கொண்டு ஏழு திருத்தலங்களுக்கு எழுந்தருளு முறைமையில் வைகாசி ௬௰ல முற்பகல் கண்டெழுந்தருளினர். இத்திருத்தல சிவாலயத்திலிருந்து சந்திரசேகரரை எழுந்தருளச்செய்து மேளதாள விருதுகளுடன் எதிர்கொண்டு வழிபாடாற்றி வழியனுப்பி வரலாயிற்று. வண்டிகளில் தமிழன்பர்கள் சதியோதனம் கொண்டுவந்தும், சௌராட்டிர அன்பர்கள் அரிசி தவசங்கள் கொண்டுவந்து சமைத்தும் ஆயிரக்கணக்கான பேர்கட்கு அமுதருத்தி யுபசரித்தார்கள்.

சித்தாந்த வித்தியாசாலையின்கண் தமிழ்ப்பண்டிதர் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆசிரியராக விருந்து மாணவர்கட்குத் தமிழ்ப் பாடம் நடத்தி வருகின்றார்கள். பதினறு மாணவர்வரை சேர்ந்து படித்து வருகிறார்கள். தேவாரமும் இன்னிசையுடன் ஓதுவிக்கப் பெறுகிறது.

தஞ்சை:— வைகாசிமீ ௬௧ல மூலநாள் திருஞானசம்பந்த சுவாமிகளின் குருபூஜாதினம் கொண்டாடப்பெற்று ஒவ்வொரு ஆலயங்களிலிருந்தும் முத்துப் பல்லக்குகளில் சுவாமிகள் திருவுலாப் போந்தருளினர். நூறாயிரக்கணக்கான அன்பர்கள் காட்சிகண்டின்புற்றனர்.

கருந்திட்டைக்குடி:— ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ வசிட்டேசுவரருக்கு வைகாசி மஹோற்சவம் வைகாசி ௧௯ல தொடங்கி ௬௦ல ஏழுதிருத்தலங்களுக்கு எழுந்தருளுவித்து இனிது நிறைவேறியது.

பலவான்குடி:— சிவகங்கை ஜமீன்தாரரால் மானியம் விடப்பட்டு வேளார்களால் பூசைசெய்யப்பெற்றுவரும் அஞ்சாத பெருமாளையனர் கோயில் மண்டபம் புதுக்கப்பெற்றும், உள்ளூர் பெ. உலகப்பசெட்டியாரின் உருவாரம் தாபித்தும் மேற்படி செட்டியார் மகள் வள்ளியம்மையாச்சியும், உள்ளூர் நகரத்தார்களும் உதவிய பெரும் பொருட் செலவால் வைகாசி உ௭ல மகாகும்பாபிஷேகமும், செங்கமலநாயகி திருவுலாவும், அடுத்தநாள் மஞ்சுவிரட்டும், செங்கமலநாயகி திருவுலாவும் நடைபெற்றன. திருவாசக பாடசாலையில் வைகாசி ௬௧ல மூலநாள் திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை செய்யப்பெற்றது. ஆனிமீ ௧௭ யாகிய இன்று மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெற்றது. ௧௬ல உத்தரநாள் திருவாசக பாடசாலையில் இரண்டாவது குருமூர்த்தியாகிய ஸ்ரீசிதம்பர சுவாமிகளின் குருபூசையும், உ௰ல உத்தரநாள் கால குமார விநாயகர் திருக்கோயிலிலும், நகரசிவாலயத்திலும் நடராசர் அபிடேகமும் தரிசனமும் நடைபெறும்.

திருப்பதி:— ஸ்ரீ வேங்கடாசலபதிவிருத்தவேடந்தாங்கிக் காட்சிதந்து அடியவர்களை நன்னெறியிலொழுகும்படி கட்டளையிட்டதாக இடைக்குடி வீ. பெ. குப்புசாமி சேர்வை துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1938
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

| | | |
|---|---|---|
| ஆண்டு ௧௧. | வெகுதானிய–ஆனி 1938—ஜூலை—1௨ | திங்கள் ௧௧ |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருத்தென்குடித்திட்டைத்
# திருத்தல வரலாறு.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகம் பெற்ற இத்திருத்தல வரலாறுகளைத் தெரிந்து கொள்ளப் பேராவலுற்றேன். சைவ சித்தாந்த சரபமாக விளங்கிய சென்னை, சூளை - ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் இயற்றிய உரைநடை நூல்களுள் ஓரிடத்து எடுத்துக்காட்டாகத் திட்டைத் தலபுராணம் கூறுகிறதென விளக்கியிருப்பக் கண்டேன். அப்புராணம் யாங்குளது? எவ்வாறு பெறலாமென நாடினேன். பல இடங்களிற் றேடியும் அது கிடைக்கப் பெறுமையால், தஞ்சை சரஸ்வதி மஹாலில் காரியம் பார்ப்பவர்களுள் ஒருவரின்மொழி வழியைக்கடைப்பிடித்துச் சீர்காழிப்பதியின் அணித்தாயுள்ள குன்னம் - உயர்திரு, சாம்பசதாசிவ சாஸ்திரியாரவர்களைக் கேட்டேன். மகாராட்டிர மன்னர்கள் தஞ்சை சரஸ்வதி மகாலில் சுவடிகள் தொகுத்து வைத்தவாறே வடநாட்டிலுள்ள ஸ்ரீ யோகீந்திரர் மடத்திலுந் தொகுத்து வைத்துள்ளார்கள் எனக் கூறி அங்கிருந்து ஸம்ஸ்க்ருதத்தில் 40 அத்தியாயங்களுடனிருந்த 'ஸ்ரீ தக்ஷிணகுடித்வீப க்ஷேத்திரமாகாத்மியம்' என்னும் இத் தென்குடித்திட்டைத் தலபுராணத்தை வரவழைத்தும், தமிழில் மொழிபெயர்த்துந் தந்தார்கள்.

அதனைச் சென்னை மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்களிடம் சமர்ப்பித்து தக்கசாஸ்திரிகளைக்கொண்டுஸம்ஸ்கிருதத்திலும்,தேவநாகரத்திலும், வித்துவான் திருவாளர், கி. வா. ஜெகநாதையரவர்களைக்கொண்டு தமிழிலும் பிழையறப் பரிசோதித்து அச்சியற்றி யுதவும் வண்ணம் வேண்டிக்கொண்டேன். அன்புடன் அதற்கிணங்கிய ஐயரவர்கள், சென்னை மைலாப்பூரிலுள்ள மத்ரபுரி ஸம்ஸ்கிருத கலாசாலை மீமாம்ச ஸாஹித்ய உபாத்தியாயர், ஸாஹித்ய வியாகரண மீமாம்ச சிரோமணி உயர்திரு, பாலசுப்பிரமணிய சாஸ்திரியாரவர்களைக் கொண்டு தேவநாகர எழுத்தில் பதித்து முற்றுப்பெறச் செய்தும், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பதிப்பிக்கத் தொடங்கியுமுள்ளார்கள். இறைவன் திருவருளால் எல்லாம் நிறைவேறி விரைவில் வெளிவரும்.

இத்தல புராணம் மிக அரிய பெரிய பொருள்களைத் தன்னகத்துக் கொண்டு திகழ்கின்றது. மூர்த்தி தல தீர்த்த விசேடங்களையும் வழிபட்டுப் பேறுபெற்றவர்களின் வரலாறுகளையும், சிவபரத்துவ உண்மையையும் விளக்கி மிளிர்கின்றது.

தேவாரத் திருப்பதிகத்திலுள்ள முதற்றிருப்பாடலில் "மன்னுமா காவிரி வந்தடி வருட" எனக் காவிரித் தீர்த்தத்தையும், 5-ம் திருப்பாட்டில் 'வண்செண்பகம் திருந்துநீள் வளர் பொழில்' எனத் தல விருக்ஷத்தையும், நடுவணுள்ள 6-ம்திருப்பாட்டில் 'மால், கூறினா ரமர்தருங் குமரவேடாதையூர், ஆறினார் பொய்யகத்தையுணர் வெய்திமெய், தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே' எனத் திருத்தலத்தையும், பதினொரு திருப்பாடல்களிலும் முதலிரண்டடிகளில் திருத்தலப் பெருமையையும், பின்னிரண்டடிகளில் சிவபரத்துவ உண்மையையும் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.

தேவாரத் திருமுறைக் குறிப்பில் வசிட்டர், கௌதமர், ஆதிசேடன், காமதேனு பூசித்தது; சுவாமி பசுபதிநாதர்; தேவி உலகநாயகி' எனத் துலக்கப்பெற்றுளது. உமாபதி சிவாசாரிய சுவாமிகளருளிச் செய்த திருப்பதிக் கோவை:

"கடம்பந்துறை பராய்த்து றைகற்குடி முக்கீச்சரமுங்
கருதுதிரிச் சிராப்பள்ளி திருவெறும்பி யூரே
செடுங்களம் மேலைக் காட்டுப் பள்ளியா லம்பொழில்சீர்
நிகழ்திருப் பூந்துருத்தி கண்டியூர் சோற்றுத்துறைமா
லடுவேதிகுடி தென்குடித் திட்டை புள்ளமங்கை
யஞரியார்சக் கரப்பள்ளி யருங் கருகாவூரே
...லைத் துறைநல்லூர் திருவாலூ ரதனிற்
...ச்சரஞ் சத்தி முற்றம் பட்டீச்சரமே."



என்ற 4-ம் பாடலிலும், திருப்பதிகக்கோவை:

"திருவாரூர்ப் பரவையுண் மண்டளி சாத்தமங்கை
சிற்றேமம் தளிச்சேரி திருவுசாத்தானம்
கரவீரம் திருவாலம்பொழில் வெண்ணெய் நல்லூர்
கச்சிய நேகதங் காவதம் கோடிக்குழகர்
அரசிலி தென்குடித் திட்டை வடமுல்லைவாயில்
அம்பர்ப் பெருந்திருக் கோயில் வெண்பாக்கஞ் சுழியல்
பெருமணமிந் திரநீலப் பருப்பதம் வேற்காடு
பேரெயில் பாற்றுறை முக்கீச்சரம் முண்டீச்சரமே."

என்ற ௯-ம்பாடலிலும் இத்திருத்தலப்பெயரும், சிவக்ஷேத்திரச்சிவகாமக்கலி வெண்பாவில், "க்ஷேத்திரமாம் - தென்குடித்திட்டையினிற் சேருலக நாயகிக்குப் பங்கு கொடுத்த பசுபதியே" எனச் சுவாமி யம்மன் திருநாமங்களும், வடலூர் இராமலிங்க சுவாமிகளருளிய விண்ணப்பக்கலி வெண்பாவில்—கோதியலும்—வன்குடித்திட்டை மருவுவார் மருவு திருத்தேன்குடித்திட்டைச் சிவபதமே" என்றும் தில்லைவிடங்கன் வெண்பாப்புலிக்கவிராயரென்னும் ஸ்ரீவேலுச்சாமி நாவலரவர்கள் இயற்றிய தேவாரசிவதல வெண்பா ௧௫-ல்,

"நான்புகழ்ந்தே பாடுவே னன்மணமின் மத்தமொடு
தேன்பிலிற்றுங் கொன்றையணி தேவிறையும்—வான்புலவ
ரென்குடித்திட் டைய விவன்பிதற்றி னானெனினுந்
தென்குடித்திட் டையன்றன் சீர்."

என்றும் திருத்தலப் பெயரும், திரு ஆரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்) ஸ்ரீ சோமசுந்தர தேசிகரவர்கள் இயற்றியுள்ள சிவாலய மான்மியக்கோவை ௧௫-ம் செய்யுளில்,

"மட்டவிழ் கொன்றை மகிமலி வேணி மருவிய பசுபதி நாதா
எட்டரும் பசும்பாம் பிறைஞ்சிடும்பொருளே யென்னையா ளுலகநா
[யகிசேர்
திட்டையி லிருக்கு திட்களா நிறைந்த நின்மல வெனக்குநீ யருள்வாய்
திட்டையின் முளைத்த சிவக்கொழுந் தேயென் செல்வமே கருணைவா
[ரிதியே"

என சுவாமி அம்பிகை திருநாமங்களும், சுவாமி சுயம்பூதேசுவர் என்பதும், திருத்தலப் பெயரும், ஆதிசேடன் பூசித்தசெய்தியும் விளக்கப்பெற்றுள்ளன.

ஈக்காடு இரத்தினவேல் முதலியார் அவர்கள் இயற்றிய சிறப்புப் பெயரகராதியில் "காவிரித்தென்கரையிலுள்ளசிவதலம். பசுபதீசர், உலகநாயகியம்மை, சக்கரதீர்த்தம், பசு தீர்த்தம். திருஞானசம்பந்தர் பதிகம்" எனக் குறித்துள்ளார். 'சிவக்ஷேத்திர யாத்திரா விளக்கன்', 'சிவக்ஷேத்திரயாத்ரா நுகூலன்', 'சிவஸ்தலமஞ்சரி', 'அபிதானகோசம்', 'அபிதானசிந்தாமணி', ஆகிய நூல்களிலும்பசுபதீஸ்

வார், உலகநாயகி, சிவதீர்த்தம், சக்கர தீர்த்தம் எனக் குறித்துள்ளார்கள்.

திருக்கோயில் கல்வெட்டில் ஸ்வஸ்திஸ்ரீ தென்குடித்திட்டையுடையார் தேறினார் வழிபடுவார் கோயில் தேவதானம் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. அரசியலார் (பைமாஷ்) நில வளவைக் குறிப்பின் கண்ணும் திட்டை வசிட்டேசுரஸ்வாமி ஆலயத்திலுள்ள மூர்த்திகளின் பெயர்கள் விளக்கியிருப்பதில் தட்சணகுடேசர் என்ற திருப்பெயரும் தீர்த்தத்திற்கு சந்நிதிவாசல் திருக்குளம் என்ற பெயரும் (சர்வே பிளான்) நில வெல்லைக் காட்டும் படங்களில் சிவன் கோயிற்குளம், ஈசுவரன் கோயிற்குளம் என்ற பெயர்களும் பட்டாக்களில் தேறுநாதசுவாமி வசிட்டேசுரசுவாமி என்றபெயர்களும் காணப்பெறுகின்றன.

இத்திருத்தலத்துக்கு வடமேற்கில் இராமாபுரவெல்லையில் தேறுநாத சுவாமிக்குரிமையாகத் தீர்த்தக்குளம் என்று ஒரு குளம் அரசியலார் கணக்குகளில் பதிவு செய்யப்பெற்றுத் தேவஸ்தான அநுபவத்திலிருந்து வருகின்றது.

இத்திருத்தலத்தின் கண் இடபதேவர் சுவாமி சந்நிதிக்குச் சற்று வடபால் விலகியுள்ள காரணம் ஆராய்ந்தறிய வேண்டும். மேற்கண்ட ஆராய்ச்சிகளால் இஃது சோழவளநாட்டில் காவிரித் தென்கரையிலுள்ளது. தஞ்சாவூருக்கணித்தான திட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே முக்கால்மைலில் திட்டையென வழங்குவது. வேதங்களும் விட்டுணு முதலான தேவர்களும் விசிட்டர், கௌதமர், ஆதிசேடன், காமதேனு முதலியோரும் பூசித்தது. நான்குயுகங்களிலும் பலாசவனம், கொன்றைவனம், வில்வவனம், சண்பகவனம் என்ற திருப்பெயர்களால் முறையே வழங்கப்பெறுவது. இத்திருத்தலத்திற்கு: தட்சிணகுடத்வீபம் தென்குடித் திட்டை, வசிட்டாச்சிரமம், தேனுபுரி என்னும் திருப்பெயர்களும், சுவாமிக்கு: சுயம்பூதேசர், தட்சணகுடேசர், வசிட்டேசுரர், பசுபதிநாதர், தேனுபுரிநாதர், தேறுநாதர் என்னும் திருப்பெயர்களும், தேவிக்கு: சுகந்தகுந்தளாம்பிகை, மங்களநாயகி, உலகநாயகி என்ற திருப்பெயர்களும், சுவாமிசந்நிதி முன்னருள்ளது சிவதீர்த்தமும், நதி காவிரி தீர்த்தமும், திருக்கோயிலின் உட்பிரகாரத்தின் வடபால் உள்ள கூபம் திருமஞ்சன தீர்த்தமும், மேற்கே கண்ணபிரான் கோயிலுக்கு மேல்பால் உள்ளது சக்கர தீர்த்தமும், வடமேற்கே இராமாபுரத்தில் உள்ளது பசுதீர்த்தமும் என ஐந்து தீர்த்தங்களும் உடையது என்பனவாதிய அறியற்பாலனவாகும். சந்நிதித் திருக்குளத்தைப் (மூல தீர்த்தம்) பசுதீர்த்தமெனவும் இராமாபுரத்திலுள்ள தீர்த்தத்தை சக்கரதீர்த்தமெனவும் சிலர் கூறுவர். யாவும் ஆய்ந்து தலபுராணம் தமிழில் வெளிவருங்கால் விளக்கப்பெறும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-JUL 1938
MADRAS

# இந்திய இலக்கியக் கழகம்.

(சென்னை, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் பாரதீய ஸாஹித்யபரிஷத்தின் முதலாவது மகாநாட்டில் செய்த வரவேற்புப் பிரசங்கம். அவர்கள் பதிப்பித்த 'நல்லுரைக்கோவை' மூன்றாம்பாகத்தின் ஒன்பதாவதாகவுள்ளது.)

முன்னுரை.

புண்ணிய பூமியாகிய பாரதவர்ஷத்திலுள்ள பலவேறு நாடுகளினின்றும் இலக்கிய ஆராய்ச்சியின் பொருட்டு இங்கே வந்துகூடியிருக்கும் உங்களுடைய காட்சி என்னுடைய உள்ளத்தில் ஆனந்தத்தை உண்டாக்குகிறது. தென்னிந்தியர் சார்பாக உங்களைச் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். மேலும், சிறியதாயினும் என்மனம் விசுவரூபத்தை அடைந்து இந்திய நாடு முழுவதையும் இப்பொழுது தழுவிக் களிக்கின்றது. எல்லாச் சபைகளிலும் அறிவு விளக்கத்தைத் தரும் சபைகளே சிறப்புடையனவாகும். அறிவின் பெருக்கத்தையும் இலக்கிய ஒற்றுமையையும் குறித்து நாம் கூடியிருக்கின்றோமென்று எண்ணும்பொழுது என்னுடைய ஞாபகம் பழைய காலத்துக்காட்சிகளிற்போய்ப்பதிகின்றது. தமிழரசர்களுடைய ராஜதானிகளிலும் வடநாட்டு நகரங்களாகிய உஜ்ஜயினி முதலிய இடங்களிலும் பல பாஷைகளைப் பேசும் அறிஞர்கள் தமக்குள் மனங்கலந்து பழகிய செய்திகள் என் அகக்கண்முன் தோன்றுகின்றன; இக்கழகத்தினால் உண்டாகும் அரிய பயனை நினைந்து இன்ப சாகரத்தில் உள்ளம் ஆழ்ந்துவிடுகிறது.

இந்த ஸாஹித்ய பரிஷத் அறிவொளியைத் தரும் மலைமேல் விளக்காகத் திகழ்கின்றது. இந்த விளக்கை ஏற்றிவைத்த பெரியார் இன்று தலைவராக வீற்றிருத்தல் இதன் விசேஷ வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகத் தோற்றுகின்றது. உலகத்துப் பேரறிஞர்களாற் புகழப்பெற்றவரும் "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும்" ஆகிய மகாத்மா காந்தியடிகளின் அன்பினால் உண்டான இந்த மகாசபையில் நானும் கலந்துகொள்ளும்படி நேர்ந்த இந்த நாளை என் வாழ்க்கையிற்சிறந்த நாளாக எண்ணுகின்றேன்.

திராவிட பாஷா ஸமூகத்தின் தாயிடமாக விளங்கும் இச்சென்னையில் நடைபெறும் இந்தப்பரிஷத்தில் உங்களை வரவேற்கும் தகுதிவாய்ந்த பெரியோர்கள் பலர் இருக்கின்றார்கள். திராவிட பாஷைகளுள் பழைமையான தமிழில் பல வருஷங்களாக ஈடுபட்டுக் கறையானோடும் நாமபாணப் பூச்சிகளோடும் போராடி ஏட்டுச்சுவடிகளின் புழுதியால் மங்கிய கண்களோடு முதுமைப் பருவமும் துன்புறுத்த, உங்கள்முன் வந்து நிற்கும்

என்பாலுள்ள குறைபாடுகள்பல. ஆனாலும் முதியவனென்ற ஞாபகத்தினால் இந்த நாட்டினர் உங்களை வரவேற்கும் பொருட்டுத் தங்களுடைய பிரதிநிதியாக என்னை முன்னே நிறுத்தி யிருக்கிறார்கள். உங்கள் வரவு நல்வரவாகுக!

எனக்குத் தமிழையன்றி வேறு பாஷைகளிற் பயிற்சியில்லை; ஆதலால் தமிழ் நூல்களால் அறிந்த சில விஷயங்களை மட்டும் உங்களுக்கு இப்போது தெரிவிக்கிறேன்.

## தமிழ் வித்துவான்களின் தலைமை.

தமிழ்நாட்டில் எந்தக்காலத்திலும் வித்துவான்களுக்கே தலைமை இருந்து வந்தது. அவர்கள் அறிவைப் பரப்புவதற்குச் செய்துவந்த தொண்டுகள் சிறந்தனவாக யாவராலும் கருதப்பட்டன. அரசர்கள் புலவர்களுக்கு உயர்ந்த மதிப்பை அளித்தனர். அவர்களுடைய அறிவுரையைப் பொன்னேபோற் போற்றி வந்தனர். சில சமயங்களில் புலவர்கள் அரசர்களுடையகுற்றங்களை எடுத்துக்காட்டிக் கண்டித்ததும் உண்டு. சில புலவர்கள் மந்திரிகளாகவும் வேறு பல சிறந்த உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து அரசாங்கம் நல்வழியில் நடைபெறுவதற்குக் காரணமாக விளங்கினர்.

## புலவர்களின் ஒற்றுமை.

புலவர்களிடத்தே காணப்பட்ட ஒற்றுமை வியக்கத் தக்கதாக இருந்தது; "புலவர்களோடு சேர்ந்து பழகும் இன்பத்தைக் காட்டிலும் தேவலோக இன்பம் சிறந்ததாக இருக்குமாயின் ஒருமுறை பார்த்து வரலாம்" என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நாலடியாரிலுள்ள ஒரு செய்யுள் சொல்லுகிறது. சுவர்க்க இன்பத்தை விட அறிவுடையோர்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் இன்பமே சிறந்ததாக அவர்கள் கருதி இருந்தார்கள்.

பழையகாலப் புலவர்களிடத்தில் பகைமை யென்பது மருந்துக்கும் இல்லை; "எல்லாத் தேசங்களும் எங்கள் தேசமே; எல்லாம் எங்கள்ஊரே; யாவரும் எங்கள் சுற்றத்தாரே; பகைவர் யாரும் இல்லை" என்று புறநானூற்றில் ஒரு புலவர் சொல்லியிருக்கிறார். ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டிய அரசர்களிடத்தில் வித்துவான்கள் சென்று மகிழ்வித்துப்பரிசுகளைப் பெற்று வந்தனர்; பின் அப்பகையரசர்களைச் சமாதானப்படுத்தி ஒற்றுமையாக வாழச் செய்தார்கள். ஒற்றுமையும் சமரஸ பாவமும் வித்துவான்களுடைய சிறந்த இயல்புகள். அவர்களுக்கு எல்லோருடைய வீடுகளும் திறந்திருந்தன.

## பிறநாட்டினரோடு பழக்கம்.

தமிழ்நாடு முழுவதும் சென்று பழகியதோடு பிறநாடுகளுக்கும்



அவர்கள் சென்று அங்கங்கேயுள்ள அறிஞர்களுடைய பழக்கத்தைப் பெற்றனர். அப்படியே பிற நாட்டிலுள்ள வித்துவான்களும் தமிழ் நாட்டிற்கு வந்து பழகிப் பாராட்டப்பெற்றுச் சென்றார்கள்.

சிலப்பதிகார மென்னும் பழைய தமிழ் நூல் இற்றைக்குச் சற்றேறக்குறையப் பதினேழு நூற்றாண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் பல பாஷைகளைப் பேசும் பலநாட்டு மனிதர்கள் மனங்கலந்து இனிது வாழ்ந்து வந்தனரென்று அது தெரிவிக்கின்றது. மதுரை முதலிய நகரங்களிலும் அப்படியே இருந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் பாஷைகளின் நயங்களை ஒருவருக்கொருவர் சொல்லி இன்புற்றனரென்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பொழுது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகப் பழையதும் பல ஆயிர வருஷங்களுக்குமுன் இயற்றப் பெற்றதுமாகிய தொல்காப்பியத்தில், கல்யாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் தலைவன் படிப்பதற்காக வேற்று நாட்டிற்குப் போவதைப் பற்றிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற நாட்டாரோடு வியாபாரம் செய்தவர்கள் புறத்தேயுள்ள அவ்வந்நாட்டுப் பாஷைகளில் வல்லுநராக இருந்தாரென்பதை மணிமேகலை முதலிய நூல்கள் சொல்லுகின்றன. காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்திருந்த வியாபாரி ஒருவன் நாகசாதியினர் வாழும் தீவிற் சிக்கிக்கொண்டான். அச்சாதியினர் நரமாமிச பக்ஷணிகள். அவர்கள் அவனைக் கொல்ல வந்தபோது அவன் அவர்களுடைய பாஷையை அறிந்திருந்தானதலின் அதிலேயே பேசினான். உடனே அவர்கள் மகிழ்ந்து தம் தலைவனிடம் கொண்டு சென்று பல பரிசுகளை அளித்து அனுப்பினார்கள். இது மணிமேகலையிற் கண்ட வரலாறு.

கூர்ஜரம், வங்கம், நேபாளம், இலங்கை முதலிய இடங்களிலுள்ள சிற்பிகளும் தொழிலாளிகளும் தமிழ் நாட்டு வேலைக்காரரோடு கலந்து உழைத்துக் கட்டிடங்களை அழகு படுத்தினர்; தங்கள் கலைத்திறனைப் பல வகையில் அமைத்து விளக்கினர்.

## பதினெண் பாஷை.

முற்காலத்தில் இந்திய பாஷைகளில் முக்கியமானவை பதினெட்டு என்றதொரு கொள்கை இருந்தது. அப்பதினெட்டுப் பாஷைகளிலும் வல்லவர்கள் தமிழ் நாட்டில் அங்கங்கே இருந்தார்கள்; மகளிரும் வேறு பாஷைகளில் அறிவு வாய்ந்தவராக இருந்தனர்.

## ஆரியர்.

தமிழ் நூல்களை ஆராய்ந்தால், வட நாட்டினரைத் தமிழர் ஆரிய

ரென்று குறித்து வந்ததாகத் தெரிகின்றது. சிலர் கருதுவதுபோல ஆரிய ரென்பது ஒரு சாதியினரையோ, ஒரு குலத்தினரையோ குறிப்பாகத் தோற்றவில்லை. வடநாட்டுக்கூத்தை ஆரியக்கூத்தரென்றும், வடநாட்டு அரசர்களை ஆரிய அரசர்களென்றும், பல சாதியினரும் கலந்த வட நாட்டுப்படையை ஆரியப் படையென்றும்கூறும் தமிழ் நூல் வழக்கங் களால் இது விளங்கும்.

வடநாட்டு அரசர்களுள் ஒருவனாகிய ஆரிய அரசன் பிரகத்தனென் பவன் தென்னாட்டுப் புலவர் பெருமானாகிய கபிலரிடம் தமிழ் கற்றான். தமிழின்நயங்களை அவனுக்குப்புலப்படுத்துவதற்காக அவர் 'குறிஞ்சிப்பாட்டு' என்ற ஒரு நூலை இயற்றினார். அது தமிழுக்குச் சிறப்பாக அமைந்துள்ள தெய்விகக் காதலைப் பற்றிச் சொல்வது. பல அரிய மலர்களின் பெயர்கள் அதில் வந்துள்ளன; அதைக் கேட்ட அரசன், "தமிழர் எத்தகைய உயர்ந்த லக்ஷியங்களை உடையவர்கள்! அவர்கள் இயற்கையை எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்! எத்தனை மரங்கள்!" என்று ஆச்சரியப்பட்டிருப்பா னென்பதில் ஐயமில்லை.

மற்றோர் ஆரிய அரசனாகிய பிரமதத்தனென்பவன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஒரு புலவனாக இருந்து தமிழ்ச் செய்யுட்களை இயற்றியிருக்கின் றான். அவன் இந்நாட்டு இலக்கியங்களைப் பயின்றதையன்றி இந்நாட் டுக்கே உரிய இசையையும் பயின்று தமிழ் நாட்டு இசைக்கருவியாகிய யாழில் வல்லவனான். இதனால் அவன் ஆரிய வரசன் யாழ்ப்பிரமதத்தன் என்று வழங்கப்பட்டான்.

## கோசர்.

தமிழரசர்களுடைய நியாய சபையில் வடதேசத்து அறிஞர்கள் இருந்தனர். அங்ஙனமிருந்த கோசரென்ற ஒரு வகையார் வடநாட்டில் இருந்த சத்திய புத்திரர்களைச் சேர்ந்தவர்களென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இதுகாறும் கூறிய விஷயங்களால் பண்டைக் காலத்தில் இந்திய பாஷைகளைக் கற்ற வித்துவான்களுள்ளும் மற்றவர்களுள்ளும் ஒற்றுமை யிருந்ததென்பதும் தமிழர் பிற பாஷைகளைக் கற்றதன்றிப் பிறநாட்டின ருக்குத் தமிழைக் கற்பித்து வந்தனரென்பதும் புலனாகும்.

## பிறநாட்டிற் பரிசுபெற்ற புலவர்.

பிற்காலத்தில், இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங் களுக்கு முன் இருந்த கம்பர் தெலுங்கு நாட்டிற்குச் சென்று தம்முடைய தமிழறிவை வெளிப்படுத்திப் பிரதாப ருத்திரனென்ற அரசனால் சம்மா



னம் பெற்றார். முந்நூறு வருஷங்களுக்குமுன் இருந்த குமரகுருபர முனிவரென்பவர் ஹிந்துஸ்தானி பாஷையை நன்றாகக் கற்று டில்லி பாதுஷாவினிடம் ஸம்மானங்கள் பெற்றுக் காசியில் மடங்கட்டிக்கொண்டு வாழ்ந்தார். அங்கே அவர் கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதுண் டென்றும், அக்காலத்தில் அம்முனிவரோடு பழகிய ஸ்ரீ துளஸீதாஸர் தம் முடைய இராமாயணத்தில் கம்பர் கருத்துக்களை அமைத்திருக்கின்றன ரென்றும் சிலர் கூறுவர். அருணகிரிநாதர் முதலியோரும் அங்ஙனமே வடநாட்டினாரால் போற்றப்பட்டனரென்பதற்குரிய குறிப்புகள் கிடைக் கின்றன.

தமிழ்நாட்டுச்சங்கீதவித்துவான்கள், மகாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பாஷைகளையும் அறிந்து உபயோகப்படுத்தினர்; அந்த அந்த நாட்டிற்குச் சென்று புகழ்பெற்றனர். இவை பழைய வரலாறுகள்.

## இக்காலத்து நிலை.

இப்பொழுது, அரசியல் சம்பந்தமான விஷயங்களாலும் சாதிசமய வேறுபாட்டுணர்ச்சியாலும் பாஷை விஷயத்திலும் வேறுபாடான சில கொள்கைகள் உண்டாயிருக்கின்றன. ஆயினும் தமிழன்பர்களுடைய முயற்சிகளால் புதுவகையில் தமிழ்நூல்கள் இயற்றப்பட்டுவருகின்றன; கலை, கதை ஆராய்ச்சி முதலிய விஷயங்களில் உபயோகமுள்ள அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றது.

இந்தப் பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் நோக்கம் எவ்வளவு உயர்ந் தது! இதன் முயற்சிகளால், குறுகிய நோக்கங்களும் சிறு வேறுபாடுகளும் ஒழிந் தமிழர்களுள் ஒற்றுமை, திராவிடபாஷா சமூகத்தாருள் ஒற்றுமை, பாரதீய பாஷா ஸமூகத்தாருள் ஒற்றுமை ஆகிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகுமென்றே நம்புகிறேன்.

## இந்தியாவின் பொதுமொழி.

இந்தப் பரிஷத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, ஒரு பாஷையி லுள்ள அரிய விஷயங்களை எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவாக்கிக் கொள்ளுதலாகும். நம்முடைய பொதுப்பாஷையாக ஹிந்தியை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலுள்ள பல பாஷைகளிலும் இது பொதுவாக இந்தியாவிற்கே உரியதென்பதை இதன் பெயரமைதியே குறிக்கின்றது. பழைய காலத்தில் ஸம்ஸ்கிருதம் இந்தியாவின் பொது மொழியாக இருந்ததென்று சில பழைய நூல்களால் தெரியவருகின்றது.

சிலகாலமாகத் தமிழ்நாட்டு இலக்கியப் பகுதிகளிற் சில 'ஹம்ஸ்' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. தமிழின் விரிந்த

நூற்பரப்பைப் பார்த்தால் அது பல அரிய விஷயங்களை உலகத்திற்கே உதவும் பெருமை வாய்ந்ததென்பதை அறியலாம்.

## தமிழின் பழமை.

இப்பொழுது இந்திய நாட்டில் வழங்கும் பாஷைகளுள் வடமொழியை யல்லாமல் இலக்கிய வளம் படைத்தவற்றுள் மிகப்பழமை யானது தமிழ். இதன் இலக்கணத்தை நாட்டும் தொல்காப்பியம் இன்ன காலத்ததென்று வரையறுக்கப்படாத நிலையில் உள்ளது; மூவாயிர வருஷங்களுக்கு மேற்பட்ட பழமையுடையதென்பதில் தடையொன்றும் இல்லை.

சங்க நூல்களென்று சொல்லப்படும் நூல்கள் 2000 வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்டவை. அவற்றுள் அழிந்தனபோக இப்பொழுது கிடைக்கும் நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கென்று மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. தமிழுக்கே சிறப்பாக அமைந்த இசைநூல்களும் நாடக நூல்களும் பிற கலைகளைப் பற்றிய நூல்களும் அழிந்தன. பெருங்கடலைப் போலப் பரந்திருந்த அக்கலைகளிற் சில துளிகளே இப்பொழுது கிடைக்கின்றன.

இலக்கியத்திலும் பல நூல்கள் இறந்துவிட்டனவாயினும் முற்கூறிய முப்பத்தாறு நூல்கள் இப்பொழுது புத்தகவுருவத்தில் வெளிவந்துள்ளன.

## தமிழின் சிறப்பு.

தமிழ்மொழியில் மற்றப் பாஷைகளில் வரையறுத்துச் சொல்லப் படாத பொருளிலக்கணமென்ற பகுதியொன்று சிறப்பாக இருக்கிறது. அகப்பொருள், புறப்பொருள் என்று இரண்டு வகைப்படுவது அது. அகப்பொருள் காதல் வாழ்வைப் பற்றியது; புறப்பொருள் பலவகையாக அமைந்தாலும் அதிற் பெரும் பகுதி வீரவாழ்வைப் பற்றியது. இலக்கியத்துக்கு உயிரை யூட்டும் காதலும் வீரமுமே தமிழர் பொருளிலக்கணத்தால் வரம்பு செய்யப்பட்டிருக்கின்றன. சங்க நூல்களில் இவ்விரண்டு வகையிலும் உள்ள செய்யுட்கள் பல.

பண்டைத் தமிழ் நூல்களில் இயற்கை யழகின் வருணனை அதிகம். ஸ்வபாவோக்தியாகிய தன்மை நவிற்சியணியே எங்கும் காணப்படும்; அதிசயோக்தி பெரும்பாலும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

## பண்டைத் தமிழ்க் கவிதை.

அக்காலத்துப் புலவர்களின் கவிதை இயற்கைத் தாயின் மடியில் தவழ்ந்து, தெய்விகக் காதலிலும் அறந்திறம்பா வீரத்திலும் விளையாடி,



சமரஸ நிலையில் வீற்றிருக்கின்றது. கவிஞர்களுடைய சிருஷ்டிகளில், அருவிகள் இடையறாத சங்கீதத்தோடுவீழ்வதும், அதில் மகளிர் துளைந்து விளையாடி இன்புற்று மலர்களைப் பறித்துப் பாறையிலே குவித்து அழகு பார்ப்பதும், நாயகன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டு வருவதும், அவன் அம்மகளிர் கூட்டத்திலுள்ள நாயகியொருத்தியைக் காண்பதும், இருவர் கண்களாகிய மடை வழியாகப் பாய்ந்த அன்பு வெள்ளத்தில் இருவருள்ளமும் கலந்து கரைவதுமாகிய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம்.

ஏழை இடையன் வீட்டில் பந்தற்காலில் கட்டியிருக்கும் தழையை ஆட்டுக்குட்டி உண்பதும், கடற்கரையிலுள்ள வலையர் தெருக்களில் முத்துக்களைக் கிளிஞ்சிலுக்குள் இட்டுக் குரங்குகள் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடுவதும், இடையன் மாலைக் காலத்தில் தன்னுடைய புல்லாங்குழற் கீதத்தினால் பசுக்களையெல்லாம் ஒன்றுகூட்டி வீட்டுக்கு வருகையில் வழியிலே மலர்ந்துள்ள முல்லைப் பூக்களைக் கொத்தோடு பறித்துத் தலையிற் செருகிக் களிப்பதுமாகிய காட்சிகளைக் காண்கிறோம். அரசர்கள் வித்துவான்களோடு கூடிப் பொழுது போக்குவதும், காலவரையறைப்படி அரசியற்காரியங்களைச் செய்வதும், குடிகளுடைய வழக்கை நடுநிலைமை பிறழாது தீர்ப்பதும், விழாக்கொண்டாடுவதுமாகிய காட்சிகளையும் பார்க்கிறோம்.

நெடுநாட்களாகத் தீ மூட்டப்படாமையால் காளான் முளைத்த அடுப்பும் ஓட்டைக் கூரையும் உள்ள வறுமை நிலையம் ஒரு பக்கம் சித்திரிக்கப்படுகின்றது; பல பண்டங்களை விற்கும் இடங்களில், பகலிற் கொடிகளாலும் இரவில் விளக்குகளாலும் பாஷை அறியாதவர்களும் அறிந்து கொள்ளும்படி இன்ன இன்ன பண்டங்கள் விற்கப்படுமென்பதைக் குறிப்பிக்கும் கடைவீதிகளிலும், அரண்மனைகளிலும் திருமகள் நடனம்புரியும் கோலம் ஒரு புறம் சித்திரிக்கப்படுகின்றது.

வீரம், காதல், கருணை, சோகம் முதலிய ரஸபாவங்கள் அங்கங்கே அமைந்து விளங்குகின்றன. இவற்றிலெல்லாம் தமிழர் காட்டிய நடையை மற்றவர்களும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமன்றோ?

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்".

[துன்பத்தைப் பொறுத்து விரதமிருப்பவர்கள் ஆற்றுவது பசியை; அவர்கள் செய்யும் தவம் அப்பசியை அன்னதானத்தால் மாற்றுபவர்களுடைய தவத்திற்குப் பிற்பட்டதேயாகும்]

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை."

[மரணத்தைக் காட்டிலும் துன்பந்தருவது வேறொன்றில்லை; ஆயினும் கொடுக்கமுடியாதபோது அம்மரணமும் இனிதாகும்]

என்பதைப்போன்ற பல நீதிகள் அடங்கிய திருக்குறளும்,

"......நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்"

[தம்முடைய உண்மையன்பர்கள் கொடுப்பாராயின் நஞ்சினையும் நாகரிகர் உண்பார்கள்]

"செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை"

உடம்பின்மேல் சந்தனத்தை எறிந்தாலும் உடம்பைச்செதுக்கினாலும் பிளந்தாலும் மனத்தில் வேறுபாடுண்டாகாத சமநிலை]

"செய்தி கொன்றோர்க் குய்தியில்"

[நன்றி மறந்தவர்களுக்குப் பிராயச்சித்தமே இல்லை]

என்பனபோன்ற நீதிகளைச் சொல்லும் வேறு பல நூல்களும் அடங்கிய தமிழருடைய பொக்கிஷத்தை யாவரும் வாரிக்கொண்டு பயன் படுத்த வேண்டாமா?

பகைவனுக்குப் பயந்து காட்டிலிருந்தபோது தன்பால் பரிசுபெற வந்த புலவனுக்குத் தன் கைவாளை நீட்டித் தன் தலையை அரிந்துசென்று பகைவனிடம் கொடுத்துப் பொருள்பெறும்படிசொன்ன குமண வள்ளலது வள்ளன்மையையும், தம்முடைய நண்பராகிய புலவர் இன்ன நாளில் வருவாரென்று குறித்தான் உயிர்நீங்கும்பொழுது அவருக்கும்இடமொழிக் கச்செய்த கோப்பெருஞ் சோழனென்னும் அரசனுடைய நட்புணர்ச்சியை யும், பசுவின் கன்று இறத்தற்குக் காரணமாகிய குற்றத்தை அறியாமற் செய்த தன் மகனைத் தேர்க்காலின் கீழ் இட்டுக் கொல்லத் துணிந்த சோழனது நீதிநிலைமையையும், தம்மைக் குத்திய பகைவனுக்குத் தீங்கு நேராவண்ணம் செய்து பின் உயிர்விட்ட மெய்ப்பொருள் நாயனாருடைய மன வலியையும் மற்றப் பாஷைகளைப் பேசுவோர் படித்து அறிந்து பாராட்டினால் அப்பொழுதாவது தமிழருக்கு ஓர் ஊக்கம் உண்டாகாதா?

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமா யணம், பெரிய புராணம் முதலிய காவிய ரத்னங்களை இந்தியர் யாவரும் ஆராய்ந்து ஆனந்தமடையும் நாள் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

## நிலப் பகுப்பு.

தமிழர் நிலங்களைப் பகுத்த பகுப்பும், காவிய கதியை வரையறுக்கும் இலக்கணங்களும் மற்ற பாஷைகளுக்குப் புதியவை. தமிழ் நாட்டார் நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்தார்கள். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை; வெனி லால் நீரற்றுப்போனமலையும்காடும் சேர்ந்த இடம் பாலை; வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல். இவ்வைந்து நிலங்களுக்கும் தனித்தனியே தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, மரம், மலர், நீர்நிலை, தொழில் முதலிய வரையறைகள் உண்டு. பூமிசாஸ்திரம், தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், மனோதத்துவம் முதலிய பல சாஸ்திரங்களால் அறியப்படும் உண்மைகளுக்கு இவை பொருத்தமாக இருக்கின்றன.



சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதியாக இருந்து விளங்கிய டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் மதுரை நகரசபைத் தலைவராக இருந்த காலத்தில் அந்நகரைச் சார்ந்த சில இடங்களில் சில மரங்களை வைத்து வளர்க்கச் செய்தனர். முதலில் வைத்த மரங்கள் பட்டுப்போயின. தமிழ் நூல்களை அறிந்தவராகலின் அப்பெரியார் அப்பொழுது தமிழ் அகப் பொருள் நூல்களைப் படிக்கச் செய்து அந்த அந்த இடத்திற்கேற்ற மரங் கள் இன்னவை யென்பதை யறிந்து அவற்றை வைக்கச் செய்த காலத்தில் அவை நன்றாக வளர்ந்தனவாம். இச் செய்தியை அவர்களே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இதனால் தமிழ் இலக்கியத்திலுள்ள செய்திகள் இயற்கையோடு பொருந்தியிருத்தலை அறியலாம்.

## அரசியல் முதலியன.

நாட்டை ஆளும் முறை, நகரத்தின் அமைப்பு, பாதுகாப்பு, ஒழுக்கங் கள், தெய்வவழிபாடு முதலியவைகளைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளைப் பார்த்தால் தமிழர் நாகரிக வாழ்வின் நிலை நினைக்குந்தோறும் வியப்பை உண்டாக்குகிறது. அரசன் குடிகளோடு கலந்து நாட்டு நன்மை களைச் செய்வதும், அறிஞர்களுடைய சபையைக்கூட்டி நன்றாக ஆராய்ந்து காரியங்களைச் செய்வதும் ஆகிய செயல்கள் தமிழர் அரசாட்சியைச் சிறந்த நிலையில் வைத்தன. குடிகளுக்கு எந்த வகையிலும் துன்பமில்லாத அரசியல் ஏற்பட்டிருந்தமையால் தமிழர்வாழ்வு இன்பவாழ்வாக இருந்தது; அதனால் அரசனைத் தெய்வமாகக் கருதி வந்தனர். வைஷ்ணவ பக்தர் களுள் ஒருவராகிய நம்மாழ்வார், "அரசனைக்கண்டால் திருமாலைக் கண்ட வன்போலாகின்றேன்" என்று ஒரு தலைவி சொல்வதாக அமைக்கின்றார். அங்கங்கே நகரங்களிலும் இருந்த அதிகாரிகள் உலகமே பிறழ்ந்தாலும் தம் கடமையைக் குறைவின்றி நிறைவேற்றி வந்தனர். அரசன் குடிகளின் சேவகனாக வாழ்ந்தான். புலவர்களுக்குள் ஒரு புலவனாகவும், வீரர்களுக் குள் ஒரு வீரனாகவும், ரஸிகர்களுக்குள் ஒரு ரஸிகனாகவும், ஏழை ஜனங் களுக்குள் ஓர் ஏழைமனிதனாகவும் இருந்து குடிகளுக்கு உயிரைப்போல விளங்கினான். இத்தகைய அரசியலைப் பற்றித் தமிழ் நூல்களிற் காணும் அரிய செய்திகள் நம்மை ஒரு கனவுலகத்திற்கு இழுத்துச் செல்கின்றன.

## கலைகள்.

தமிழ் வைத்திய நூல்கள் அருமையான விஷயங்களடங்கியவை. சித்த வைத்திய நூல்களென்று அவை வழங்கப்படும். சிற்பம் முதலிய

கலைகளின் திறத்தில் தமிழ் நூல்களின் உதவியால் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம். பிற்காலத்தில் ஸ்தல சம்பந்தமான இலக்கியங்களும் பிரபந்தங்களும் ஆயிரக்கணக்காகத் தமிழில் உண்டாகியிருக்கின்றன.

## புலவர்களின் ஒற்றுமையால் உண்டாகும் பயன்.

பழைய தமிழ் நூல்களிலுள்ள அரிய சரித்திர விஷயங்களிற் பல இன்னும் விளங்காமல் இருக்கின்றன. பரந்துவளர்ந்த இந்திய நாகரிகம் ஒன்றுபட்டு நின்ற காலத்தில் இயற்றப்பட்ட அந்நூல்களைப் பரந்த அறிவோடு பார்க்கும்போது பல உண்மைகள் வெளியாகலாம். ஜாவா, கம்போடியா, ஸையாம் முதலிய இடங்களிலுள்ள சிற்பங்களாலும் ஆங்கே வழங்கும் வரலாறுகளாலும் இதுகாறும் விளங்காத தமிழ் நூற் செய்திகள் பல விளங்குகின்றன. இந்திய பாஷா பண்டிதர்களுள் ஒற்றுமை உண்டாகுமாயின் அவர்கள் இந்நூல்களைப் படித்தோ மொழிபெயர்க்கச் செய்தோ அறிந்துகொண்டு ஆராய்ந்து பல விஷயங்களை விளங்கச் செய்யலாம். இனி, நாம் இயற்றப்புகும் இலக்கியங்களில் இந்த ஒற்றுமையைப் பயன்படுத்திக் கொள்ளுவது நலமாகும்.

## நம் கடமை.

பிற்காலத்து நூல்களில் வரவர உயர்வு நவிற்சியும், ஸ்வபாவவிரோதமாகிய வருணனைகளும், அளவுக்கு மேற்பட்ட சிருங்காரமும், விரோதவுணர்ச்சியை உண்டாக்கும் மத விஷயங்களும் புகுந்து ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தன. இனி நூல் செய்யப்புகுவார் அவற்றை நீக்கவேண்டும்; பழைய நூல்களில் இருந்தால் அவற்றை இலக்கிய இன்பத்துக்காகப் பாதுகாத்துக்கற்றல்வேண்டும்.

புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷைகளிலுள்ள விஷயங்களை அறிவதனால் இத்துறைகள் இன்னும் விரிவடையும். காலடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது; அதற்கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன; அக்கொள்கைக்கு ஏற்றபடி இலக்கியங்களும் நல்வழியில் மாறவேண்டியது இயல்பேயாகும்.

தங்கள் தங்கள் நாட்டினரின் உள்ளத்தை வசீகரிக்கும் இலக்கிய ஆசிரியர்களாகிய நீங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்களுடைய பேரறிவின் துணையினால் பொதுவாகத் தென்னாட்டாரும் சிறப்பாகத் தமிழ் நாட்டாரும் அறிய வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. உங்களுடைய தேசபாஷைகளாகிய ஆறுகள் ஞானமாகிய சாகரத்தில் ஒன்றுசேர்ந்து விளங்குகின்றன. இந்தப் பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் மூலமாக உங்களுடைய ஞானச்செல்வம் இந்நாட்டினருக்குப் பயன்பட்டு நம்மிடையே பரந்த பாஷாபிமானத்தையும் அன்பையும் விருத்தி செய்வதாக! இறைவன் நமக்குத் தோன்றாத் துணையாக இருந்து நல்லருள் பாலிப்பானாக!

# எண்ணும் எழுத்தும்.

(ஆலங்குடி திரு, பண்டித அ. கோபாலையர் அவர்கள்.)

தமிழ் நாடு உலகத் தோற்றக் காலத்திலேயே உண்டானதென்பதும், அது முதற்கொண்டே ஈண்டுத் தமிழ் வழங்கிவருகிறதென்பதும் உயர்ந்தோரறிந்த உண்மைகளாம். தோற்றக் காலந்தொட்டு இற்றைக்குச் சுமார் 700 ஆண்டுகளுக்குமுன் வரையிலும் இந்நாட்டைச் சேர சோழபாண்டியரென்னும் மூவேந்தரும் மனுமுறை தவறாமல் ஆண்டு வந்தனர். அவர்கள் காலத்தில் தமிழ் இயல் இசை நாடகமென்னும் மூன்றுபிரிவினையுடையதாய், முதல் இடை கடையென்னும் மூன்று சங்கங்களாலும் வளர்க்கப்பெற்று வந்தது. ஆதலால், மூவேந்தர், முத்தமிழ், முச்சங்கம் என்னும் பெயர்கள் நிலவலாயின.

மேற் கூறிய முச்சங்கங்களுள் கடைச் சங்கம் இற்றைக்குச் சுமார் 1800 ஆண்டுகட்கு முன் வரையிலும் நடைபெற்றது. அச்சங்ககாலத்தில் முத்தமிழும் வழங்கிவந்தன. பிற்காலத்தில் நாடகத்தமிழும், இசைத்தமிழும் அருகிவிட, இயற்றமிழ் மாத்திரம் அதன் பிரிவுகளாகிய எண் (கணிதம்), எழுத்து (இலக்கிய இலக்கணங்கள்) என்னும் இரண்டோடும் செழித்து வளர்ந்துவந்தது. இக்காலத்தே தமிழில் வடமொழிக் கலப்பு உண்டாயிற்றெனினும் அதனாற் கேடில்லை; நன்மையுண்டு என்பதும் பலர் கொள்கை. இங்ஙனமாக முன்சொன்ன 700-ஆண்டுகளுக்குமுன் வரையிலும் நிகழ்ந்துவந்தது. அதனோடு தமிழ்மன்னராட்சி முற்றுப்பெற்றது.

தமிழ் மன்னராட்சிக்குப் பிறகு இந்நாடு பிறமொழியாளராட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் அன்னார் மொழிவேறாயிருப்பினும் அரசாங்கமொழி தமிழாகவே இருந்தது. ஆங்கிலேயர் வந்தபிறகு நாளுக்குநாள் நம் தமிழுக்கு ஆதிக்கியம் குறையவும், அவர்கள் மொழிக்கு அஃது அதிகமாகவும் வழிகள் ஏற்பட்டன. இந்நிலை 19-ஆம் நூற்றாண்டின் முடிவுவரையிலும் இருந்ததென்னலாம்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலகணிதம் அரசாங்க நிகழ்ச்சிக்குமட்டும் உரியதாயிருக்க, நாட்டு வழக்குகளுக்கெல்லாம் தமிழ்க் கணிதம் உரியதாயிருந்தது. அக்காலத்தில் வருமானவரி இலாகாவில் தமிழரொழுங்கிவைத்திருந்த தமிழ்க் கணக்குகளைப் பரிசோதித்து வரி விதிப்பதற்காகத் தமிழ்க் கணக்கில் தேர்ச்சி

பெற்ற கணக்காளர்கள் நியமிக்கப்பெற்றிருந்தனர். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பெரும்பொருள் முதல்வைத்துப் பற்று வரவு வியாபாரம் முதலியன நடாத்திய தனவைசியர்களனை வரும் தங்கள் வரவு செலவு கணக்குகளைத் தமிழெண்கொண்டே எழுதிவைத்திருந்ததனால் அவற்றைப் பரிசோதிப்பதற்காக மேற் கூறிய தமிழ்க் கணக்காளர் இருந்து வந்தனர்.

தமிழ்க் கணிதம் பின்னவகையில் ஆங்கில கணிதத்தைவிட மிகவும் எளிதானது. இக்கணிதத்தில் பின்னத்திற்கு உரியனவாக முந்திரிலக்கம், கீழ்வாயிலக்கம் முதலிய சிறு நூல்களும், கணக்கதி காரம் முதலிய பெருநூல்களும் இருத்தலால் அவற்றை அறிந்தவர் கள் பெரிய பின்னக் கணக்குகளையெல்லாம் தம் மனத்தாலேயே செய்து முடிப்பர். அத்தகையார் இப்பொழுதும் ஆங்காங்கு இலை மறை காய்போல் இருந்து வருகின்றனர்.

இப்பால் (சுமார் 30-வருடமாக) அரசாங்க வியவகாரத்திற் குரிய கணக்குகளெல்லாம் ஆங்கில எண்களாலேயே எழுதப்பட வேண்டும் என்ற விதி வந்தது. அதனால் ஆரம்பப் பள்ளிக்கூடங் களிற் கூடச் சிறுவர்கள் ஆங்கில கணிதமே பயிலவேண்டியதா யிற்று. அங்ஙனமே இப்பொழுதும் பயின்று வருதலால் இக் காலத்துத் தமிழர்கள் தமிழ்க்கணிதத்தை அறவேமறந்துவிட்டனர். இப்பொழுது ஆங்கில பட்டதாரிகளுக்கேயன்றி, வித்துவான், பண்டிதர் முதலிய தனித்தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் தமிழ்க்கணி தம் இன்னதென்பது தெரியவில்லை. தமிழ்ப் பட்டதாரிகளுக்கு மட்டுமேனும் தமிழ்க் கணிதம் பயிற்றுவிக்கவேண்டுமென்று சில அறிஞர்செய்த முறையீடுகளும் இதுகாறும் பயன்படவில்லை.

தமிழ் கற்றவர்க்குக் கண்ணென்று சொல்லப்படுவன என் ணும் எழுத்தும் ஆம். இவ்விரண்டனுள் இக்காலத்துத் தமிழ்க் கல்வியாளர் எழுத்தைமாத்திரம் கொண்டு எண்ணை இகழ்ந்து வரு கின்றனர். இவர்கள் "எண்ணெழுத் திகழேல்", "எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும்",

> "எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்னும் ஆன்றோர் வாக்குக்களை மறந்துவிட்டனர் போலும். இங்ஙனம் பலவகையானும் நம் தமிழ்க் கணிதம் ஆதரவற்று மறைந்து வருகிறது. இந்நிலை,

> "ஆதி முதலொழிய அல்லா தனவெண்ணின்
> நீதி வழுவா நிலைமையால் —மாதே



> அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
> திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு"

என்னும் (குறள் 392, பரி. உரை) வெண்பாவை நினைப்பூட்டி நிற்கின்றது.

இனி, 'நமக்குச் சுயராச்சியம் வந்தால் ஆங்கிலம் வேண்டாம்' என்று கூறுவோர் அது வருங்காலத்தில் கணிதத்திற்கு என்செய் வரோ தெரியவில்லை. அப்பொழுது தமிழ்க் கணிதமே நமக்குப் பயன் தரவல்லது. ஆதலால் தமிழர் தமிழ்க் கணிதத்தை இப்பொ ழுதே பாதுகாத்தல் வேண்டும். அங்ஙனம் பாதுகாத்தற்குரிய வழிகள் வித்துவான் பரீக்ஷைக்கும், பண்டித பரீக்ஷைக்கும் ஓரளவு தமிழ்க் கணிதத்தையும் சேர்த்துப் பாடமாக்குதலும், கிராமந் தோறும் ஆரம்பப்பள்ளிக்கூடங்களை நிறுவிப் பழைய முறைப் படியே தமிழெழுத்து, எண் என்னும் இரண்டையும்சிறுவரனைவர்க் கும் பயிற்றுவித்தலும் ஆம். இங்ஙனம் செய்வதற்குத்தமிழாசிரியர்க ளனைவரும் முதலில் தாமே தமிழ்க் கணக்கைப் பயிலவேண்டும். இவற்றிற்கு அரசாங்கத்தாருதவி இன்றியமையாதது; தமிழ்ச் சான்றோருதவியும் வேண்டற்பாலதாம்.

நடைமுறையில் ஆங்கிலக் கல்விச்சாலைகளிலெல்லாம் பயிற்று விக்கப்படுவன ஆங்கில எழுத்தும் எண்ணும், தமிழெழுத்தும் வேறு சில பாடங்களும் ஆம். இனிச்சுயராச்சியம் கிட்டும்பொழுது தமிழர் ஆங்கிலத்தை நீக்கித் தமிழையும், இந்தியையும் பயில வேண்டிவருமென்றும், அவற்றுள் இந்தியே இப்பரதகண்ட முழு மைக்கும் பொதுமொழியாயிருக்கவேண்டுமென்றும் ஒரு சாரார் கூறி, அதற்கனுகுணமாக இப்பொழுது சில வகுப்புக்களில் இந்தி யைக் கட்டாயபாடமாக்கியிருக்கின்றனர் அவ்வகுப்புக்களில் தமிழப் பிள்ளைகள் தங்களுக்குரிய தமிழ்மொழியையும் அரசாங்க மொழியாயுள்ள ஆங்கிலத்தையும், அதன் கணிதத்தையும், இனி வரவிருக்கும் பொதுமொழியாகிய இந்தியையும் பயின்று தீரவேண் டும். இந்நான்குடன் வேறு பாடங்களுமுண்டு. இங்ஙனம் இந்தி யைத் திணித்துச் சிறுவர்களைத் துன்புறச் செய்வது தகுதியன் றென்று பலர் வாதாடி வருகின்றனர். அங்ஙனம் வாதாடுகிறவர் களும் தமிழ்க் கணிதமாகிய அகக் கண்ணிற் படிந்திருக்கும் மாசை நீக்க வழிதேடவில்லை. அன்னார், இப்பொழுது தமிழ் நாட்டுச் சான்றோருள் தலைசிறந்து விளங்கும் பெரியாராகிய தமிழ்டாக்டரைக் கண்டு உசாவினால் அவர் அதற்குச் சிறந்த வழிகாட்டியாயிருப்பா ரென்பது திண்ணம். எண்ணும் எழுத்தும் என்றும் ஓங்குக.

---

# மரணமும் மரண பயம் நீங்கும் வழியும்.

(திரு. ஜி. சுந்தரமையரவர்கள்)

"தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த வகம்பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே."

மரணம் என்பது உலகத்தில் நடைபெறும் ஒரு சம்பவம். மரணம் நாம் அடிக்கடி காணும் ஒரு காட்சி. பல உறுப்புகள் அடங்கிய இந்தச் சரீரத்தில் உள்ளும் புறமும் சஞ்சரிக்கும் மூச்சானது நின்று விட்டால் மனிதன் இறந்ததாகச் சொல்லப்படுகிறது. மூச்சு நின்று விட்டால் பல வேலைகள் செய்யத் திறமைவாய்ந்த இந்தச் சரீரம் கட்டைபோல் கீழே சாய்ந்துவிடுகிறது. நமது சரீரம் அசைவற்றுக் குளிர்ந்துபோய் நாற்ற மேலிட்டு வீட்டிலிருக்க யோக்கியதையில்லாததாய் விடுகிறது. புலையனும் விரும்பாத புன்புலால் யாக்கையாய் விடுகிறது. இடுகாட்டுப் பயணத்திற்குத் தயாராகிப் பிறகு கொளுத்தப்பட்டுச் சாம்பராய்ப் போய்விடுகிறது. இத்தோற்றமாகிய புதுமையே சாவு என்பது. உயிரற்ற தேகத்தையே பிணம் என்று சொல்லுகிறார்கள். பிறந்தவுடன் சிசுவென்று கொண்டாடப் பெற்று இறந்தவுடன் பிணமென்று இகழப்பெற்றுத் திண்டாடும் நாம், மத்தியகாலத்தில் பல பெயர்களைக் கொண்டும், பல வித்தியாசங்களை உண்டுபண்ணிக்கொண்டும், உண்டு, உறங்கிக், களித்துக் கூத்தாடிக் கழிக்கும் வாழ்நாளும் ஒரு விந்தைத்தோற்றமெனலாம். தேகத்தின் முடிவு காலம் மரணம்என்றஏற்படுகிறது. ஜீவனும் மடிந்ததாக எண்ணிக் கொள்ளுகிறோம்.

2. மரணம் என்பதை மிருத்யு, காலன், எமன், நமன் என்று சொல்வதுமுண்டு. ஒரு மனிதனுடைய அந்திய காலத்தில் அவன் கருமத்திற்குத் தக்கபடி சுவர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோசெல்வதற்காகப் பகவானுடைய நியாய ஸ்தலத்தின் தீர்ப்பைப்பெற எமதூதர்கள் அந்த மனிதனை இவ்வுலகத்திலிருந்து தூக்கிச் செல்ல வருகிறார்கள்; அச்சமயத்தில் அந்த மனிதன் மரணமடைகிறான். ஆகவே, மரணம் தரும ஸ்தலம் பார்க்கப்போகும் கட்டாயப் பயணம் என்றாகிறது. இது மதநூற் கொள்கை என்று நவீனக் கல்விமான்கள் கேலிசெய்வதுமுண்டு.



3. "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே" என்றபடி ஒரு பட்சியானது தன் கூட்டை விட்டுப்பறந்து வேறிடம்செல்வது போலும், நாம் நமது சட்டையை மாற்றி வேறு சட்டை அணிந்து கொள்ளுவது போலும், கிழிந்த துணியைக் களைந்து புதுத் துணி யுடுப்பது போலும், ஜீவன் குறித்த நேரத்தில் இறைவன் சங்கற்பத்திற்குத் தக்கவாறு இந்தச் சரீரத்தை விட்டுவிடுகிறான் என்றும், ஜீவனுக்கு நாசமில்லை யென்றும், ஜீவனை சிக்ஷிக்கவோ அல்லது கௌரவப்படுத்தவோ யமதூதர்கள் அழைத்துச்செல்லுகிறார்களென்பது வெறுங் கதையென்றும், ஜீவனுடைய முன்னேற்றத்திற்காக மரணம் என்ற அனுகூல நிகழ்ச்சி ஏற்பட்டுத்தான் தீரும் என்றும் சொல்லப்பட்டு வருகின்றன. மண்ணைக் குடமென நாம் சொல்லிவரும் வழக்கம்போல தேகம் நாசமடைந்தபோது ஜீவன் இறந்ததாகப் பிரமிக்கிறோம் என்பார் சிலர்.

ஆகவே மரணம் என்பதுபல்வகையான அபிப்பிராயங்களை எழுப்புவதாயிருக்கிறது. பிறப்பு இல்லையேல் தேகம் இல்லை. தேகம் இல்லையேல் மரணம் இல்லை. இது தெளிவு. பிறப்பு யாது என்று தீர்மானம் செய்த காலத்தில் மரணம் யாது என்று நிரூபிக்கப்படும் என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது. சரீர ஜீவசம்பந்தம் ஓர்உலக விநோதம், அற்புதம், அதிசயமென்றுதான் முடிவுகட்ட வேண்டியதாயிருக்கிறது. ஈசன் திருவிளையாடல்; அவன் ஆணைக்குளடங்கியதே தோன்றலும், மறைதலும்.

4. அறிவு நூல்களைச் சற்று பார்த்தால் பிறவி ஒரு பெருவியாதியென்றும், வியாதியில் கிடப்பவன் ஒருநாள் இறப்பதுபோல் பிறந்தவன் இறந்தே தீரவேண்டுமென்றும், இறவாமலிருக்க முயற்சிப்பதைக் காட்டிலும் பிறவாமலிருக்க வழிதேடவேண்டுமென்றும் காண்கிறோம். பல விஷயங்களை விசாரம் செய்ய நமது புத்தியைஉபயோகப் படுத்துகிறோமே யொழிய பிறவித்துன்பத்தை ஒழிக்க நாம் ஒருவரும் சிந்திப்பதாயில்லை. இதுவும் ஒரு விந்தைதான். ஏதோ ஒரு மரணத்தைப் பிறவிப் பிணிக்கு முடிவென்று சாதித்துவிட்டாலும் அல்லது செய்து கொண்டாலும் பிறகு பிறப்பில்லாமல் தப்ப [illegible] சுயேச்சை உண்டாகிறது. இது நமக்கு என்று கிட்டும்?

"மாவேழ் சனனம் கெட மாயைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ"

என்ற அருணகிரியார் புலம்பலை நோக்குக.

5. மரணம் நேர்வது விரோதமாயிருக்கிறது; [illegible] நிபுணர்களையும் ஏமாற்றி விடுகிறது. வரும் வேளை தெரி[illegible] எப்படி எந்த சமயத்தில் சம்பவிக்கும் என்று அறிய முடியாத விஷயமா

186965
186965
3L

யிருக்கிறது. நேற்றிருந்தவனை இன்று காண்பது அரிதாயிருக்கிறது. இன்றிருந்தவன் நாளையிருப்பான் என்பதும் நிச்சயமில்லை. காலன் வெகு இரகசியமாய்க் கொண்டுபோய்விடுகிறான். காரணத்தைக் கண்டவர்களோ வேளையையறிந்தவர்களோ கிடையாது. பல காரணங்கள் புலப்படுகின்றன. ஆனால் மனதிற்குச் சமாதானம் வருவதில்லை. இறந்தேவிட்டான் என்பவன் பிழைத்து வருகிறான்; கல்போலிருக்கிறான் சாகமாட்டான் என்பவன் திடீரென்று இறந்துவிடுகிறான். என்ன காரணம்? காலம் முடிந்துபோய் விட்டது, போய்விட்டான் என்பது உலக வழக்கு; விதி முடிந்தது, இறந்தானென ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. பிறந்த காலத்தைச் சரியாய்க் குறிப்பது தப்புவதுபோல் மரணநேரமும் சரியாய்க் குறிக்க முடியாமலிருக்கிறது. மரணக்காலன் பெரிய கைதேர்ந்த திருடனாயிருக்கிறான்.

6. மரணம் எதையோ ஒரு சாக்கை முன்னிட்டுக் கொண்டுதான் நேரிடுகிறது. வியாதியிலிறந்தானென்றும் கல் தடுக்கியிறந்தானென்றும், சாப்பிடும்போது புரையேறி யிறந்தானென்றும், மனோவிசாரத்தாலிறந்தானென்றும் புத்திர சோகத்தாலிறந்தானென்றும் பல காரணங்களைச் சொல்லத் துணிகிறோம். சற்று யோசித்தால் நமக்கே இவைகளெல்லாம் வாஸ்தவமான காரணமாவதில்லை. இருந்தபோதிலும் சாக்குப் போக்கில்லாமல் எமதூதர்கள் ஒருவனைக் கொண்டு போவதில்லை. ஏன் அப்படி அவர்கள் செய்யவேண்டுமென்பது எனக்கு நன்றாய் விளங்கவில்லை. ஒரு வேளை காரணமில்லாமல் கொண்டு போனால் அவர்களைக் கொலையென்னும் குற்றத்திற்காகத் தர்மராஜன் தூக்கிலிட்டு விடுவான் என்று நினைந்து பயப்படுகிறார்களோ? என் கருத்தை விளக்க ஒரு சிறு கதை இவ்விடத்திற்குப் பொருந்தும். அது பாண்டியன் தருமநீதியை விளக்கவும் சொல்வதுண்டு. அது சோமசுந்தரக் கடவுள் லீலாவிபூதியுமாகும். பாண்டியன் எல்லைக்குள் ஒரு பிராமணன் தன் மனைவியோடு போய்க்கொண்டிருந்தான். தன் மனைவியின் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு அவளை ஒரு மரத்தடியில் படுக்கச் சொல்லிவிட்டுத் தீர்த்தம் கொண்டுவரச் சென்றான். திரும்பிவந்தபோது அவள் மார்பில் அம்பு பாய்ந்து இறந்து கிடக்கக் கண்டான். அடித்துக்கொண்டு அழுதான். சற்று தூரத்தில் ஒரு வேடன் தன் வில்லில் அம்பு கோத்திழுத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். உடனே தன் மனைவியைக் கொன்றவன் இவ்வேடனே என்று நிச்சயித்து, அவனை யிழுத்துக்கொண்டுபோய்த் தன் மனைவியின் சவத்தையுங் காட்டி இந்த அநியாயம் உன் செங்கோலுக்கழகோ என்று அரசனிடம் முறையிட்டான். வேடன், தான் கொல்லவில்லை என்று உறுதியாய்க் கூறினான். அரசன் யாது செய்வதென்று



தெரியாமல் தவித்துச் சோர்வடைந்து மதுரை மூர்த்தியை வேண்டிப் பிரார்த்தித்தான். அன்றிரவு ஈசன் கனவில் வந்து "நாளை செட்டி வீட்டில் கல்யாணம் நடக்கும்; அங்கே பிராமணனைக் கூட்டிக்கொண்டு நீயும் சென்றால் இந்தச் சம்பவத்தின் மர்மம் புலப்படும்" என்று வாக்களித்தார். அப்படியே அங்குச் சென்றார்கள். அவர்கள் புலன்களுக்கு அறியமுடியாத விஷயங்களை அறியும் திறமை அருளால் பெற்றார்கள். கல்யாண வீட்டில் எமதூதர்கள் சஞ்சாரம் செய்வதைக் கண்டார்கள், ஆச்சரியப்பட்டார்கள்; அவர்கள் பேசுவதைக் கவனித்தார்கள். 'நேற்று அந்தணன் மனைவியை அம்மரத்தில் வெகுநாளைக்கு முன் சிக்கிக்கொண்ட அம்பை விழும்படி செய்து அவளை இறக்கச் செய்தோம்; இன்றைக்கு எப்படி இந்தக் கல்யாண மாப்பிள்ளையைக் கொண்டுசெல்வது? மாட்டுக்கொட்டத்திலிருக்கும் ஈற்றாவை அவிழ்த்து வீட்டிற்குள் விட்டு அதன் கால்பட்டுக் கீழே விழும்படிச் செய்து சாகச் செய்வோம்' என்று பேசிக்கொள்வது இவர்களுக்குக் கேட்டது. உடனே சம்பவம் அம்மாதிரி முடிந்ததையும் கண்டார்கள். பிறகு சந்தேகம் தீர்ந்து அந்தணனும் வேடனும் தங்கள் வேலையை நோக்கிச் சென்றார்கள். வேந்தனும் அகமகிழ்ந்தான். சாக்கில்லாமல் ஏன் மரணம் மனிதனைக் கொல்லாது?

7. உலகத்தில் காண்பவைகள் நமக்கு ஆறுதலைத் தருவதில்லை. நல்லவர்கள் கஷ்டப்படுகிறார்கள்; தீயோர்கள் சுகத்திலிருந்து உல்லாசமாயிருக்கிறார்கள். புராணங்கள் அதை நினைப்பூட்டுகின்றன. தர்மபுத்திராதிகள் பட்ட கஷ்டங்கள் பல; துரியோதனாதிகள் போகத்திலிருந்தார்கள். பிரஹ்லாதன் பலவிதமாய் வருத்தப்பட்டான்; ஹிரண்யன் எல்லா நாளும் சேவிக்கப்பெற்று வாழ்ந்தான். ஒன்றும் புரியவில்லை. உலகத்தில் இது சகஜமாயிருக்கிறது. இதைக் காணும் நாம் சில வேளைகளில் ஏன் அப்பா இவ்வுலகில் பிறந்தோம்? இறந்தொழிவோம் என்று நினைக்கிறோம், நினைத்தபடி செய்யமுடிவதில்லை; வெகு சங்கடமாயிருக்கிறது; கஷ்டங்களைத் தாங்க முடியாதவன் இறக்கப் பிரியப்படுகிறான். போகத்தையே இடைவிடாமல் பெற்றவன் தன் வாழ்நாள் நீடித்திருக்கவேண்டுமென்று ஆவல் கொள்ளுகிறான். இருவரையும் எமன் ஏமாற்றி விடுகிறான்.

8. மரணத்தைப்பற்றிச் சிந்திப்பவர்களே கிடையாது. இறந்து கொண்டிருக்கும் மனிதன்கூட அதைப்பற்றி நினைக்கிறானோ என்பது சந்தேகம். பக்கத்திலிருப்பவர்களும் உயிரிருக்கும்வரை பிழைப்பான் என்று நினைக்கிறார்கள். இவர்களைப்போல்தான் அவனும் நினைத்திருப்பான் என்று தோன்றுகிறது. ஞாபகமிருக்கும்வரை "பிழைத்து விடுவேன்" என்றுதானிருக்கிறான். ஞாபகமில்லாமல் போன பிறகு என்னசிந்தித்தான்

என்று சொல்ல முடியவில்லை. 'இப்படி நினைத்திருப்பான்; அப்படி நினைத்திருப்பான்; இதைச்சொல்ல எண்ணினான்; அதைச்சொல்லப் பிரயத்தனப்பட்டான்; சமிக்கைஇப்படிக்காட்டினான்; அவன்வரும்வரை உயிரிருந்தது' என்று பலவிதமாய் அவன் பந்துக்கள்சொல்லிக்கொள்கிறார்கள். அவற்றின் உண்மையை நிர்ணயிக்க முடியாமல் போய்விடுகிறது. யாவருமிருக்கும்போதே ஒருவரும் அறியாவண்ணம் ஜகஜ்ஜாலக்கள்வனாகிய காலன்உயிரை அபகரித்துப்போய் விடுகிறான். தப்பமுடியாது; வாஸ்தவம்தான். ஆனால் ஒரு சாவித்திரி, ஒரு மார்க்கண்டேயன், எமனை வென்றுவிட்டார்களே. இக்கதைகள் பொய்யோ; பொய்யுமல்ல. மரணத்தை வெல்வது கஷ்டம்தான்; கஷ்டமென்று விடமுடியவில்லையே; முயற்சியால் அவன் அருளைப் பெறவேண்டும். மனிதப் பிறப்பு வாய்த்ததும் அதற்கே. "பாலனை இன்றே பாடுங்கள், காலனை வென்றே யாடுங்கள்" என்னும் சீரிய மொழிகளை நேயர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

9. ஜகதீசன்உலகத்திலுள்ள மன்னுயிர்களையெல்லாம் இரட்சித்துப் பாரபட்சமில்லாமல் தனது அரசாட்சியை நடத்தி வருகிறான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அறிவு நூல்களின் முடிவுமதுவே. இருந்தாலும் பல சமயங்களில் பல வினாக்களும் பல சந்தேகங்களும் ஏற்பட்டு விடுகின்றன. ஒரு பக்தன் பாடுகிறான். பக்தர்கள் வாக்கைப் பழுது என்று தள்ளல் நியாயமில்லை.

"நின்பக்க லன்பிலாப் பாவியர் படுந்துயரம்
    நின்னடியர் தாமுறுவதும்
நினையென்று மறவாத புண்ணியர் பெறுஞ்செல்வம்
    நின்மூடர் தான் பெறுவதும்
அன்புடன் நல்லறஞ் செய்தரும சாவிக
    ளல்லலான் மன நோவதும்
அறந்தனை மறந்திடும் அசத்தியப் பேயர்கள்
    அகமகிழ்ந்தே வாழ்வதும்
உன்மகிமை யோவலது கலியுகப் பெருமையோ
    வுனையன்றி யணுவசையுமோ
உலகினில் கண்கண்ட மெய்யான தெய்வமே
    உயர்பரங் குன்றிலுறைவாய்
வன்பகை சூர்வேர் களைந்ததுபோ லென்பகையை
    மாற்றிடும் வடிவேலவா
வண்ணமயில் வாகனா பொன்னேரகப் பதியில்
    வளர்சாமி நாத குருவே."



ஆனால் காலன் விஷயத்தில் இச்சந்தேகங்கள் ஏற்படநியாயமில்லை. மண்ணிலிருந்து உண்டான எல்லா உயிரையும் மண்ணிற்கே சேர்த்து விடுகிறான். வியாதிக்காரன் அயர்ந்து தூங்கும்போது ஒரு வேளை இறந்துவிட்டானோ என்று சந்தேகப்பட்டு அடிக்கடிபோய்ப் பார்க்கிறோம். இறந்த பிற்பாடு ஒரு வேளை தூங்குகிறானோ என்றுசந்தேகப்படுகிறோம். நமக்கு வேண்டியவர்கள் இறப்பதில் நமக்குச் சம்மதமே கிடையாது. எப்படி அழுது வேண்டினாலும் விடுவதில்லை. ரூபவான், சீமான், தீரன், வீரன், வேந்தன், உயர்குலத்தான், தாழ்ந்த வகுப்பான், நிபுணன், அசடன், பணக்காரன், ஏழை எல்லோரையும் மரணம் பிடித்தே விடுகிறது; எல்லாரையும் சமப்படுத்திவிடுகிறது. பாரபட்சம் என்பது கிடையாது. கடமையைப் பூர்த்திசெய்வதில் நிகரற்றவன்; தண்டனை விதிப்பதில் நிஷ்கண்டகன். உலகில் தருமம நடைபெறுமோ என்ற சந்தேகம் யமனுள்ளவரை கிடையாது என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

10. மரணம் என்றால் யாவரும் "ஆ, அப்பா' என்கிறார்கள்; பயப்படுகிறார்கள். ஓடி ஒளிந்து தப்ப முடியுமோ? நேர் நின்று சண்டைசெய்து வெல்லமுடியுமோ? தந்திரமுண்டோ? வாழ்நாளை வீணில் கழித்த நடைப்பிணங்கள் அடையும்பீதிக்குஅளவேயில்லை. அறத்தில் நின்றவர்கள் "மரண ப்ரமாதம் நமக்கில்லையாம்" என்றிருப்பார்கள். போகமே ஜன்மசார்த்தகம் என்று நினைத்து ஆயுளை வீண் செய்தவன் மரணத் தறுவாயிலும் சுயநன்மையே கருதுகிறான். தன் யோக்கியதைக்கு மீறித் தனக்கு எல்லாம்கிடைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறான். எவ்வளவுபிறரிடத்திலிருந்து சுரண்டமுடியுமோ அவ்வளவும் வெகு சாமார்த்தியமாய்ச் சுரண்டிவிடுகிறான். சுரண்டிப் புரண்டிப் பணக்குவியல் சேர்த்துவிட்டு வியாதியால் அவஸ்தைப் படும்போது பல வீண்மனோராஜியங்கள் செய்கிறான். வியாபாரத்தில் மோசம் செய்வதும் ஏமாற்றுவதும் உலக வழக்கமாய்த்தானிருக்கிறது. பலபேர்கள் நடந்தபடிதானே நடந்தேன். தன்னைத்தான் பேணுதலும், காத்துக்கொள்ளுதலும், மைந்தர்களுக்குத் தேடிவைத்தலும் தவறாமோ? தருமத்திற்கு இவ்வளவு வைக்கலாமென்றிருக்கிறேன். எப்படி ஏற்பாடு செய்யலாமென்று யோசிக்கிறான். பக்கத்து வீட்டுக்காரன் பரம ஏழை; கொஞ்சம் அவருக்குக் கொடு என்றால் ஏன் அவ்விதம் செய்ய வேண்டுமென்கிறான். போகாத வியாதியைநீக்கப் பேர் மிக்க வைத்தியருக்கு ஏராளமாய்த் தடையின்றிக் கொடுக்கிறான். "ஒரு ஏழையின் கடனைக் கேளாமல் விட்டுவிடு, வியாதி போய்விடு"மென்றால் நம்பமாட்டேன் என்கிறான். "தாய் தகப்பனில்லாத இச்சிறுவனுக்கு ஒரு பத்துரூபாய் கொடு" என்றால் கொடுக்கத் தயங்குகிறான். இந்தவிதமாய்

ஜனங்கள் சுவாசமிருக்கும்வரை பிழைப்போம் என்று நம்பி வீண் எண்ணங்கொண்டு மண்ணில் போய்ச் சேருகிறார்கள்.

11. அனாயாச மரணத்தை மனிதன் வேண்டுகிறான். இப்படி விரும்புவதும் சுயநலத்தை உத்தேசித்தே. ஒரு வியாதிக்காரனை அருகிலிருப்பவர்கள் கட்டிக் காத்தாலும் தன்னைக் கவனிப்பவர்கள் ஒருவருமில்லையே என்று ஓலமிடுகிறான். எதைச் செய்தாலும் திருப்தி அடைவதில்லை; தலையைப் பிடி, காலைப்பிடி, கையைப் பிடி என்று கத்துகிறான். வியாதி சௌக்கியமாய் விட்டால் கை, கால், தலையைப் பிடித்தவர்களை மறந்து விடுகிறான். 'என்ன செய்துவிட்டீர்கள்? என் தலைவிதி நன்றாயிருந்தது; பிழைத்தேன்' என்கிறான். நம்மில் பல பேர்கள் அப்படித்தான். மனித சுபாவம் இப்படியிருக்க, அனாயாச மரணத்தை விரும்புகிறவன் தன்னைச் சேர்ந்தவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று எண்ணியும் நிச்சயித்தும் இப்படி வேண்டுகிறான் என்று உறுதியாய்ச் சொல்ல முடியாமலிருக்கிறது. வேண்டினாலும் விரும்பினாலும் கிடைத்துவிடுமோ? பாக்கியம் செய்திருக்கவேண்டும்; பூசைசெய்து ஈசனருளைச் சம்பாதித்திருக்கவேண்டும்.

12. மரணவேதனை யென்பது ஒருவனுக்கு ஒருமாதிரி மற்றொருவனுக்கு வேறு மாதிரி என்று உறுதியாய்ச் சொல்லமுடியாது. மரணவேதனை ஒரேமாதிரி என்று கொள்ளல் தவறாகாது. விளக்கு அணைவதைக் கவனித்தவர்கள் இதை ஒப்புக்கொள்ளலாம். பட், பட் என்று துரிதமாய் அடித்துவிட்டு அணைகிறது. அதுபோல் உள்ளும் புறமும் சுவாசம் வேகமாய்ச் சென்று நின்று விடுகிறது. விளக்கு எண்ணெயில்லாமலோ போதாமலோ மங்குவதை எப்படிஅணைதல் என்று ஒப்புக்கொள்ள முடியாதோ அதுபோல் வியாதிக்காரன் படும் அவஸ்தையையெல்லாம் மரணவேதனை என்று சொல்லமுடியாது. நின்ற நிலையில் ஒவ்வொரு தழையாய் உதிரப்பெற்று உலர்ந்துபோய்க் கடைசியாகக் கீழே சாய்கிறது ஒரு மரம். பெரும் காற்றினால் மோதப்பெற்று மற்றொரு மரம் சாய்ந்துவிடுகிறது. பிறகு இலைகள் உதிரப்பெற்றுக் காய்ந்து போகிறது. கீழே விழுதல் மரத்திற்குச் சாதல் என்று ஒப்புக்கொண்டால் வேதனை சமம் என்றே சொல்வது தப்பிதமில்லை.

13. "பிறந்ததுண்டானாலன்றோ பிறகு சாவதுதானுண்டாம்." பிறத்தலும் பொய்; இறத்தலும் பொய்; போலித்தோற்றம் என்று சாதிப்பதுமுண்டு. இது ஒருவேளை அனுபவத்திலறியவேண்டிய விஷயம் போலும்! பிறந்தவன் இறந்தே தீரவேண்டும்; இறந்தவன் பிறந்தேயாக வேண்டும். இவ்விஷயங்களை ரூபித்து அடையும் பலன் என்னவோ;



நன்றாய் விளங்கவில்லை. பிறந்தாய்விட்டது; இறவாமலிருக்க முயலலாமோ, இறந்து விட்டால் பிறவாமலிருக்க முயலலாமோ, என்பது விளங்கவில்லை. அத்தானத்தில் சுயேச்சை நமக்கிருப்பதாக நிரூபிக்கவொண்ணாது. இறந்த பிறகு எங்கேசெல்கிறோம்? என்னமாய் முடிகிறது? ஜீவனால் செய்யக்கூடியதென்ன என்ற விஷயங்களெல்லாம் பெரும்பான்மையோருக்கும் தெளிவாய்த் தெரியாததா யிருக்கின்றன. இம்மாநிலத்தில் பிறந்தேதான் முத்தியடைய வேண்டுமென்பது நூல்களின் துணிவு. ஆகவே, சாவாமருந்தைத் தேடவேண்டும். பிறவாமலிருக்கவேண்டும். "மாமலையிலுள்ள மருந்தேபிணி தீர்க்கும்", "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - நீந்தார் இறைவனடிசேரா தார்", இவ்வாக்குகளைத்தான் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

14. சாத்திரங்களில் நமக்கு இருநிலை விதிக்கப்பட்டிருக்கிறது. பந்தத்திற்குக் காரணமான மனை, மக்கள், தனம் முதலானவைகளை விட்டுத் துறவுபூணல் அல்லது பந்தத்திற்கிடையே தளராமல் நின்று தியாகத்தைப் பூஷணமாகக்கொண்டு ஒன்றிலும் ஒட்டாமல் இல்லறம் நடாத்தல். இவ்விரண்டில் எது பெரிது என்ற வாதத்தில் நுழைய வேண்டிய அவசியமில்லை; இரண்டும் சமமே. கடமைகளைச் சாத்திரத்தில் விதித்தபடி பேணி நடப்பவனே பெரியவனாவான். தருமங்களைச் சொல்வதோ அறிவதோ சுலபம். அனுஷ்டிப்பது கடினம்தான். "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்று மார்தட்டுகிறோம். நம் நிலையைக் கவனிப்பதில்லை. நளனை நாம் அறிவோம். அவன் சதுர்த்தச (14) வித்தைகள் கற்றவன். இவன் இப்பதினான்கு வித்தைகளும் தெரிந்துகொள்வதற்காக நான்கு தசைகளைக் கொடுத்தான் என்று சொல்வதுண்டு. அவைகள் "படிப்பது, படித்ததைஅறிந்து கொள்வது, படித்ததன்படி நடப்பது, மற்றவர்களை நடக்கச் செய்வது."

நமக்குப் பெரும் நோய் வந்துவிட்டால் கசப்பான மருந்து, விலை உயர்ந்த மருந்து வாங்கிக்கொள்ளுகிறோம். கண்டிப்பான கட்டுப்பாடுகளிலிருக்கச் சம்மதிக்கிறோம். வியாதி தீராது, மருந்து உபயோகமில்லையென்று அறிந்தாலும் சாப்பிட்டுப் பார்க்கிறோமல்லவா?

பிறப்பும் இறப்பும் வியாதிகள்; வைத்தியநாதன் ஜகதீசன்; சாவை வென்றவன் மார்க்கண்டன்; ஈசனை மருந்தாக அடைந்தான்; கூத்தன் உதவியால் கூற்றைவென்றான். நமக்கும் எவ்வுயிர்க்கும் அவரே மருந்து. நாமும் நமனை வென்று கர்ச்சிக்கலாம்.

15. மரணம் என்ற வியாதிக்குப் பக்தியே மருந்து. அதுவே உணவுமாகும். அகந்தையை யொழித்துச் சரணம் புகுதல்வேண்டும். ஆரோக்கியமும், ஆயுள் விருத்தியும் கொடுக்கவல்ல ஔடதம் இதுவே. பக்தனுக்கு மரணபயமில்லை. ஆயுள் வலி மிதந்து காலனணுகாமல் காக்கும் பலத்தையும் அடைகிறான். நாமெல்லாரும் மார்க்கண்டனாகி மார்க்கண்டனாயிருக்கவேண்டும். நீலகண்டம், நீலகண்டம், நீலகண்டம் என்று பன்முறை சொல்லவேண்டும். ஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில் 'நீலகண்ட'மென்று முடியும் தேவாரம் தன்னைச் சார்ந்தார் மலைசுர மொழியப் பாடவில்லையா? அவ்வட்டாரத்திலே இன்றும் மலைசுரமில்லாமலொழியவில்லையா? இச்சம்பவத்தைவெறுங்கதையென்று நினைக்கும் மனப்பான்மை கொண்ட நேயர்களுக்கு இரங்கவேண்டியதைத் தவிரச் செய்யக்கூடியது யாதொன்றுமில்லை.

வியாதிக்காரனுக்கு வயித்தியன்பேரில் நம்பிக்கையும், அவன் மருந்து கட்டாயமாய்க் குணத்தைச்செய்யும் என்ற நிச்சயமும் வியாதி தீருவதற்கு எப்படி முக்கியமோ, அதுபோலமரணப்பிணியையும் பிறவிப்பிணியையும் ஒழிக்க ஈசன் துணைதான் மெய்த்துணை யென்று நம்பும் உறுதிவேண்டும்.

"சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே."

அருணகிரியார் பெருத்த பாருள்ளாருக்கு எச்சரிக்கை செய்யுங் கருத்தோடு பாடிய கந்தரலங்காரச் செய்யுளை எழுதிவிட்டு இக்கட்டுரையை முடிக்கப் பிரியப்படுகின்றேன். ஈசனைக் காலையிலும் மாலையிலும் நினைக்கும் எண்ணத்தை விட்டோம். பல அல்லல்களில் சிக்கி விழிக்கிறோம். அவன் நாமமே கைகண்ட மருந்து. அது மதியால் வித்தகனாகவும், மனதால் உத்தமனாகவும் செய்யும்.

"அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின் றிலீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே."

---

# பெண் கல்வி.

(பொத்தனூர் பெண்பாடசாலையில் திருவாளர், G. வேங்கடாசாரியார் அவர்கள் செய்த சொற்பொழிவின் சாரம்)

(திரு, R. வேங்கடநாராயண சர்மா அவர்கள்.)

"நாற்குணமு நாற்படையா ஐம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு."

என்ற புகழேந்திப் புலவரின் பெண்மை யரசைப் பலகாலும் பன்னிப் பன்னிப் பார்க்குங்கால், நமது பார் மடந்தையும் பல பெண்ணரசிகளைப் பெற்றிருக்கின்றனள். பெண்மை யரசின் இயற்கையை உணர்ந்துகொள்வதனாலுண்டாகும் பெரும் பேற்றுக்குக் கல்வியே உற்ற துணையெனப்பெரியோர்களின் அபிப்பிராயம். கல்வியென்பது ஓர் சிறந்த ஆபரணமாகும். ஆபரணத்தை விரும்பாதார் யார்? செய்யுட்களிலும் அணி என்பது ஓர் அலங்காரமாகும். அலங்காரம், ஆடவர்களைக் காட்டிலும் பெண்களுக்கே அதிக உரிமை யுள்ளது. செய்யுட்களில் இடைக்குறையானது, பெண்களின் இடைக்குறையை உத்தம இலக்கணமாமெனக் குறிப்பாய்க் குறிக்கின்றது. நாம் ஒரு பண்டகசாலைக்குப்போய் ஓர் பொருளைக் கொள்ள விரும்புவோமானால் அழகுடைய பொருளையே விரும்புகிறோம். அதுபோல ஆடவர்களும், குஞ்சியழகையும் மஞ்சளழகையும் விடக் கல்வியழகுடைய மாதர்களையே விரும்புகின்றனர். கல்வியால் மலர்ந்த மனத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா?

2. தேகஉறுப்புகளின் பல பாகங்கள்பொன்னாபரணங்களை அணியப்பெற்றிருப்பினும் அவையணியப்பெறாத கண்களுக்கு நிகராகாதனபோலப் பலசிறந்தவனங்களைப்பெற்றிருந்தாலும், ஒருத்திகல்வி பெற்றிராவிட்டால் வாசனையில்லாத மலர்போலச் சோபிக்கமாட்டாள். கல்வியானது வெறும் அழகுமாத்திரமன்று. அது ஓர் அரிய மகான்போல உதவியளிக்கும்; உடல் உயிர் என்ற இருமைக்கும்பேர் உபகாரியாகும். அற்பவிஷயங்களிற்கூட தினசரிவாழ்க்கைமுறையில், படித்தபெண்களுக்கும் படியாப்பெண்களுக்கு

முன்னை பெரு வித்தியாசங்களை நாம் கண்கூடாகக் காணலாம். படித்த பெண்கள், எளிய செலவில் இனிமையான வாழ்க்கை நடத்திக்கொள்ள நன்கறிவார்கள். சிலர் நினைப்பதுபோல பெண்கல்வியின் நோக்கம் ஆடம்பரமான வாழ்க்கை நடத்துவதற்கல்ல; விபரீதமான போக்குகளுக்குமல்ல; கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கைக்காகவுமல்ல; சில நாட்டுப் பெண்களைப் போல, கல்விகற்றுவிட்டு யதேச்சசப் பறையடித்துச் சுயேச்சையாய்த் திரிவதற்குமல்ல; தகாத வழிகளில் புருஷர்களை மயக்கித் தங்கள் குற்றேவல்களைக் கேட்டு நடக்கும்படி செய்வதற்குமன்று. ஆனால் குடும்பத்தலைவியாகிக் குடும்பத்தை நேர்மையாகவும் திறமையாகவும் இனிமையாகவும் நடத்தி உலக நன்மைகளுக்குக் காரணமான மகத்துவம் பொருந்திய பதவிக்குப் பொறுப்பாளியாக விருப்பது தனது கடமையென உணர்ந்து அவ்வழி நிற்பதற்கும் நடப்பதற்குமே பெண்கல்வி அவசியம் வேண்டப்படுகிறது. கற்புடைய மங்கையருக்கே வானம் வழங்குகின்றது. "குணசாலியான பெண்களைக்கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை நன்முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" எனக் கிறிஸ்துமத நீதி நூலிலும் கூறப்பட்டிருக்கிறது. இதனால் பெண்களான நீங்கள் மிக உயர்வுடையவர்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனாலும் சில சமயம் நேரும் எங்கள் தவறுகளை எங்களுக்கு எடுத்துக் காட்டியும் மன்னிக்கவும் செய்கின்ற உங்கள் பெருங்குணம் பெரிய வழிகாட்டியாக விருக்கிறது. பரமசிவனைப் பாகமாகக் கொண்ட பார்வதியைப் போன்ற உங்களிடத்திருந்து நாங்கள் உதவிபெறுவதாலுண்டாகும் உற்சாகம் கர்வமாகமாட்டாது.

3. பலவகைப்பட்ட பெண்களுடைய நிலைமைகளை விளக்கி அந்தந்தப் பிரிவினர்களுக்கு ஏற்படும் கல்விகளைப் பற்றி விரிவாக இங்கு கூறப்போவதில்லை. நம்நாட்டிற் கேற்றவாறு குடும்பத்திற்கு உபகாரியாயிருத்தல், புருடன் கெட்டுப்போகாமல் காவல் செய்து பண்படுத்தல், சிக்கனமாக வாழ்தல், குழந்தைகளைப் பரிபாலித்தல், முடிவில் அவர்களை உலக உபகாரிகளாக விளங்கச் செய்தல் ஆகிய இவற்றையே நீங்கள் அறிந்துகொள்ளுமளவிற்குச் சுருக்கமாகப் பெண் கல்வியின் பயனை விளக்குகிறேன். முதலில் பிறந்த வீட்டில் உங்களுக்கு எவ்வளவு சலுகை காட்டப்பட்டதோ அவ்வளவுபுகுந்தவீட்டில் நீங்கள்எதிர்பார்க்கக்கூடாது. உங்கள் ஆவிபோன்ற அன்பனும் உங்களிடத்தில் ஆரம்பத்தில் அன்பு கொள்ளாதிருக்கலாம். ஆண்களோ தாங்கள் பிறந்த குலத்திற்கு மாத்திரம் கீர்த்தியைச் செய்கிறார்கள். பெண்களோ பிறந்தகுலம் புகுந்தகுலம் ஆகிய இருகுலங்களுக்கும் கீர்த்தியை நாட்டும் சீர்த்தியையுடையவர்கள்.



புகுந்த வீட்டில் பல கஷ்டங்கள் உள்ளனவென்று நாங்கள் அறிவோம். ஆனாலும் நமக்கு நேரும் நன்மை தீமைகளான சம்பவங்களைப் புத்தியினால் நுட்பமாக ஆராய்ந்து தெய்வம் பெரிதென உணர்ந்து பொறுமையோடிருக்கப்பழகவேண்டும். பூமிதேவியைப் போலப் பொறுமையுள்ள பெண்களே உத்தமமானவர்கள். சீதை, திரௌபதி, தமயந்தி, மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் முதலிய நிலைத்த புகழ்வாய்ந்தபெண் மணிகளைப் பேணிப் பாருங்கள். அப்பொழுது உங்கள் அகத்திலே சாந்த ஊற்றுப் பெருக்கைக் காண்பீர்கள். குட்டின கையை முத்தமிட்ட தங்கையென்ற கதையைப் பாடப்புத்தகத்திலே அறிந்திருக்கிறீர்கள். பொறுமை எல்லா தொல்லல்களையு மகற்றுவிக்கும் ஆற்றல் பெற்றதெனத் தெளிவீர். புருஷனுக்குப் பின் தூங்கி முன்னெழுதல் உங்கள் முதற் கடமை. பெண்களின் சிறப்பிலக்கணங்களைச் சுருக்கமாகத் திறம்பட வகுத்த வள்ளுவர் வாக்கை நோக்குங்கள்.

"அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
யென்றூங்கு மென்கண் ணிரா."

என்ற இச்செய்யுளில் உங்கள் பணிகளெல்லாம் வெகு அழகாக எடுத்துக் காட்டப்பட்டன. இப்பணிகளுக்கெல்லாம் ஆதாரமானது எழுதலாகும். இவ்வெழுச்சி அதிகாலையாகும். 'வைகறைத் துயிலெழு' என்ற ஔவையின் வாக்குங் காண்க. இவ்வெழுச்சி திருப்பள்ளி யெழுச்சியோடு நிகழவேண்டும் உங்கள் இன்னிசை இதற்கே உரியன. "வாயார வாழ்த்து கின்றோர் மனத் தமர்ந்த தெய்வம்" இந்நிலை உங்களுக்கு எய்தினாற்றான் உங்கள் தினசரி வாழ்க்கையின் மீத பாகங்கள் நேர்மையாய் நிகழக்கூடும். "முதற் பூமி கைவந்தோர் முற்றிலும் கைவந்தோரே". சிறு குழந்தைகள் விளையாட விரும்புவதுபோல் நீங்கள் வீட்டு வேலைகளைச் செய்ய ஆசைப் படவேண்டும்.

4. உங்கள் காதலன் உங்களுக்குத்தெய்வம் என்பதை ஒருபொழுதும் மறவாதீர்கள் ஆடவர்களை வசப்படுத்தும் இயற்கை வல்லமை வாய்ந்த உங்கள் நெற்றி, புருவம், கண், புன்முறுவல் முதலியவற்றை விடத்தெய்வீகசக்தி பெற்ற உங்கள் இன்மொழிகளுக்கு அதிகப் பெருமையுள்ள தென்பதை நீங்கள் உணரவேண்டும். இனிமை இயற்கையுடையவர்களே! உடலைச் சுத்தமாக எப்பொழுதும் வைத்திருக்கவேண்டும். உடலில் முக்கியமான பாகம் முகம். முகந்துலக்கி நெற்றிக்குறிகொள்ளலே

உங்கள் பணிகளின் முதல் அடையாளம் இது நமது வாழ்க்கையின் உயர்ந்த கொள்கையைக் குறிப்பதாகும். இவ்வடையாளத்திலிருந்துதான் நாம் வாழ்க்கை யாத்திரை துவக்கவேண்டும். நீங்கள் நெற்றிக்கணியாமல் ஒரு காரியமும் செய்யாதீர்கள். வீட்டுக்குத் தலைவியாதலால், எல்லாக் காரியங்களையும் நீங்கள் கவனிக்கவேண்டும். தண்டவாளப் பெட்டிமுதல் துடைப்பம் வரையுள்ள பதார்த்தங்கள் அந்தந்த இடங்களில் நேர்மையாக வைக்கப்பட்டிருக்கின்றனவா? பண்டங்கள் பாழ்போகாமல் உபயோகிக்கப் படுகின்றனவா? வீடு அசுத்தமில்லாமல் அழகாக விளங்குகின்றதா? என இவைகளில் நீங்கள் கவனமாயிருக்கவேண்டும். அன்பனும், மற்றும் கவனிக்கப்படவேண்டியவர்களும் சரியாக நடத்தப்பட்டார்களாவென்பது இவ்வரிசையில் முதன்மையாகும். ஒருக்கால் உங்கள் நாயகன் ஆடம்பரங்களில் ஆசையுள்ளவனாகில் சாமார்த்தியமாக மாற்ற முயலவேண்டும். இந்த முறைகளை மிகஅழகாக நமது கவிதாகூர் 'குமுதினி' என்ற நூலில் கதை ரூபமாக விளக்கியிருக்கிறார். அந்தக் கதைநூல் நீங்கள் பன்முறை படிக்கத் தகுந்தது. உங்கள் உண்மையான அன்பு எல்லாவற்றையும் இனிமையாக்கிவிடும்.

5. இனி அன்பின் அடையாளமாகக் கருக்கொள்ளுமிடத்து நீங்கள் கவனிக்கவேண்டியமுதற்படி சுகாதாரம். இப்பொழுது வளர்ந்துவரும் கருவின் உயிரையும்நினைக்கவேண்டியிருக்கிறது. காற்று, ஜலம், ஆகாரம்முதலியவைகளைப் பற்றி நீங்கள் பாடபுத்தகங்களில் பயின்றிருப்பனவற்றையும், சுகாதாரப் பிரசங்கங்களில் கேட்டனவற்றையும் அனுசரியுங்கள். மனதில் கவலை தங்கஒருபோதும் இடங்கொடாதீர்கள். இதுவே தேவை. நமக்குத் தெரியாதனவற்றைத் தெரிந்தவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டும். நேர்மையாய் நடக்கின்றவர்களைக் கவனிக்கவேண்டும். பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்தில் நீங்கள் அதிகம் கவனிக்கவேண்டும். அவர்கள் ஆண்டவனுக்கு அன்பர்களாக்கப்படவேண்டும். இந்த ஆக்குதற்றொழில் கடவுளால் உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தொழிலின் தேர்ச்சியே பெண் கல்வியின் பயனாகும்.

---

குலமிக வுடையர் எழில்மிக வுடையர்
குறைவில்செல் வமுமிக வுடையர்
நலமிக வுடையர் என்னினுங் கல்வி
ஞானமற் பழுமிலா தவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியி லென்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான்.

(வில்லிபாரதம்: பழம் பொருந்து சருக்கம் ௧௧.)

உ

# விளைந்த சூளினா லிளைத்த வியாதர்.

(திருத்தென்குடித்திட்டை சித்தாந்தவித்தியாசாலைத் தமிழாசிரியர்
திரு, த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.)

"ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்." (கந்தபுராணம்)

சராசரம் போற்றும் பராசர முனிவருடைய பெறலருந் தவத்தால் தராதலத்திடைத் தோன்றியவர் வியாதமாமுனிவர். அவர் நான்கு வேதங்களையும், ஒப்புயர்வற்ற பதினெண் புராணமுதலியவற்றையும் பகுத்துரைத்த பெற்றியுடையவர். அவ்வியாதர் ஒரு காலத்தில் கொடிய பாதகத் தன்மை நிறைந்த கலியுகம் வருவது குறித்து நடுநடுங்கி யாண்டுச் செல்வதென ஓர்ந்து கடிநறும்புனற் கங்கைசூழ் காசியையடைந்து முடிவில்லாதமாதவஞ்செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது அங்குள்ள மெய்த்தவர் பலரும் வியாதனார் அடிபரவிமறைமுடிவின் உண்மை ஈதென அங்கை நெல்லியின் அறிவித்தருளுமாறு வேண்டினர். அவரும் அவ்வாறே வேதம், புராணம், ஸ்மிருதி, நியாயம், ஆயுண்மறை, கந்தருவவேதம், வில்வேதம், பொருள்நூல் இவைகளின் பொருள்களை விரித்து அவற்றின் நுண்மைப் பொருள் இதுவிதுவெனத் தெளிவாக எடுத்துணர்த்தினர். அவற்றைக் கேட்ட முனிவர்கள் வியாதரை நோக்கிப், பெரும! எங்களுள்ளம் பிறழாது ஒருவழிப்பட ஒருவார்த்தையின் மறைமுடிவு ஈதெனத் தொகுத்துச் சொல்வீராக வெனப் பின்னும் இரந்தனர். அம்முனிவர்கள் வேண்டுகோட் கிசைந்த வியாதமாமுனிவர் மருளின்மூழ்கியசிந்தையராய்த்தவமுனிவர்களைப் பார்த்துமுற்கூறிய பொருளுரைக்குமாருகஅறிவுநூல்களையெல்லாம் பன்முறையாராய்ந்தாலும் தெளியப்பெறுவதொன்றுளது. அது நாராயணனேபரப்பிரமமென்பது. வேதநூற்குமேல்வேறுநூலில்லை; அவ்வாறே கேசவற்குமேல்தெய்வமுமில்லை. எல்லா நூல்களாலுந்துணியப்பட்ட முடிபு இதுவேயாகும். இதுசத்தியம், சத்தியமெனக் கரமெடுத்து நின்றுரைத்தார். இம்மொழியைக் கேட்ட மாதவர் அச்சுற்று வேதங்களிற் கூறிய பொருண்மொழிக்கு முற்றும் மாறுபட்ட இவ்வுரை எம்மனோரால் கொள்ளத்தக்கதன்று என உளநடுங்கினராய் அம்முனிவரரை நோக்கி முனிவரேறே! தேவரீர் இப்பொழுது கூறிய அறவுரை வேதநூற் பிரமாணமாயின் விசுவநாதனார் திருமுன்னின்று எமக்குரைத்தருளுவீராகவெனச் சாற்றினார். உடனே வியாதனார் விரைந்தெழுந்து விசுவேசர் திருமுன்

னர்ச் சென்று நின்று அச்சஞ் சிறிதுமின்றி முன்புகன்றதே புகன்று இருகைகளையும் மேலுயர்த்திச் சூளுரைத்தனர். வேத நூற் பொருள்களை யெல்லாம் பன்முறை யாராய்ந்தறிந்த வியாதனார் இறைவனருள் கைவரப்பெறாமையினாலன்றோ மலச் செருக்கால் இவ்வாறு கரைந்து கரமெடுத்தனரெனக் கருதி முனிவர்கள் முன்னையினும்பெரிதுமஞ்சித் துணுக்குற்றனர். 'குற்றமில்லாதகூறுபாடுகளெல்லாந் தனைப்பெயரே'யென்னும் மறைவழக்குத் தன்மையால் சிவபிரான் மலைமகளுடன் மகிழ்வுடன் வீற்றிருந்தனர். நந்தியெம்பெருமான் அவ்வியாதனார் கூறிய அடாதமொழியையும், பொய்ச் சூளையும் பொறாதவராய் வெகுண்டு சொல்லிய நாவும் எடுத்த கரங்களும் எடுத்த வண்ணமே அசைவற நிற்குமாறு சபித்தனர். அதனால் வியாதனார் விசுவேசர் திருமுன்னர் நாட்டப்பெற்ற வெற்றித் தம்பமொத்து விளங்கி வருந்தித் திருமாலைச் சிந்தையால் வழிபட்டார். அப்போது திருமால் அவ்வியாதனார் முன் தோன்றிக் காட்சி தந்து, வியாதனே! என்ன காரியஞ் செய்தனை? நீ கெட்டதுமின்றி என்னையுங் கெடுத்தாய். வேதங்களெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து மெய்ப்பொருளுண்மை தெளிந்த நீ இம் மயக்கத்தை யெவ்வாறடைந்தாய்? சுற்றமுமற்று முள்ளயாவையும் அறத் துறந்துயாவரும்என்றும்தக்காங்கு தியானஞ்செய்யப்படும்ஒப்புயர்வற்ற முழுமுதற் கடவுள் மேன்மைசான்ற சிவபிரானே என்றன்றோ நான்மறைமுடிவாகிய அதர்வசிகை நவில்கின்றது. யாமெல்லாம் அம்முழுமுதற் கடவுளாகிய சிவபிரானுடைய திருவடிகளைத் தியானஞ் செய்கின்ற உயிர் வர்க்கத்தவராவோம் எனத் தெளிவாயாக. அப்பதிப் பொருளின் அருள் விரவலின் பசுக்களாகிய உயிர் வருக்கமும் உலகத்துத் தியானப் பொருள்களாமெனச் சில நூல்கள் புனைந்து கூறுமுண்மையையும் ஓர்ந்துணர்வாயாக. நீங்காத ஆணவமலச்செருக்கினால்மயங்கிய பேதாய்! அறிஞர் கொண்ட கோட்பாடு இதுவேயாகும். அறிவறை போகிய நீ இனிப் பிழைத்தலை வேட்டனையாயில் என் அறிவுரைகளை மெய்யெனக்கொண்டு போற்றுவாயாக. மந்திரங்களோடு செய்யப்படும் யாகங்கட்குத் தலைவன் இந்திரனாவான். வேதங்கட்குத் தலைவன் நான்முகக் கடவுளாவான். இந்திரன் முதலிய உலகினர்க்குத் தலைவன் யானே. எனக்கிறையவர் மணிகண்டராவார். எப்பொருட்குந் தலைவர் அவரேயாவர். அவருக்குமேல் தலைவரில்லை. எல்லா உலகங்களும் அவருடைய திருவாணையினாலேயே நடக்கும். எல்லா உலகங்களையும் படைத்து அளித்துத் துடைப்பவர் அவரே. எல்லா நூல்களிலும் சொல்லிய முடிபும் இதுவேயாம். வானுளோர் எத்த



யான் வைகுந்தவாழ்க்கையைப்பெற்றதும், நான்முகன்சத்தியவுலக வாழ்வை நண்ணியதும், ஏனை விண்ணவர்கள் தத்தம வாழ்க்கைகளையடைந்ததும் இடபக்கொடியை யுயர்த்திய இறைவனை ஏத்தி வழிபட்டமையாலேயேயாகும். அத்தகைய பெருமைபொருந்திய சிவபிரானுடைய திருவடிகளையே சரணமென்றடைவாயாக. நீ திரிபாகக் கொண்டமயக்கவுணர்வினைவிட்டொழிப்பாயாக. இன்றேல், நீ அழிந்தாய். அன்றிப் பிறரையுங் கெடுக்க வுன்னுகின்றனையென வெகுண்டுரைத்தனர்.

திருமால் வெகுண்டுரைத்த அறிவுரையைச் செவிமடுத்த வியாதர் செத்துப் பிறக்கின்ற தெய்வத் தொகைகளை யெல்லா மொதுக்கி மால் விடைப்பகவனே பரம்பொருளெனத் தெளிந்து மெய்த்தவர்களாகிய முனிவர்களை விளித்து மேதகையீர்! தூய மறைப் பொருள் முழுதுந் துகளறத்தெளிந்த உங்கட்கும் என்னைப் போலவே மயக்கவுணர்வு எய்தியதோ? என்னை விளைவிய தென்ன காரணம்? "கருளக் கொடியுயர்த்த மாயோன் உலகமயமாவர்; அவ்வுலக முழுமுதல்வன் விடையேறுகைக்கும் விமலனேயாவர். திருத் துழாய் மாலையை யணிந்த திருமால்யாகமென்பர்; அந்த யாகபதியோ கடுக்கை மலர் மாலையை யணிந்த கண்ணுதலாவர். மாயையாகிய கொடிய முரனை வதைத்தவர் முராரி; அம் மாயையை யாள்பவராகிய வள்ளல் புராரி. மயில்போலுஞ் சாயலுடைய வனிதை நாரணன். சீர்ப்புருடன் அச்சிவபிரானே". எனச் சிறந்த வேதங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும் பலபடியாக புழங்கவும் மயக்க வுணர்வினால் தவறுற்ற என்னை யறிவுச் சுடர் கொளுத்தாமல் இவ்வண்ணம் வருத்தமுறக் கண்டீர்! இது நுமக்கழகோ!! அன்றிச்சிவபிரானையாவரே யருச்சனை புரியாதவர்? அச்சிவபிரான் எவரையாயினும் அருச்சனை புரிந்ததுண்டோ? இனி, இத்தகைய கவர்த்த மனத்தை விட்டொழித்து யாமெலாம் அச்சிவபிரானுடைய மலரடிகளையே சரணமாகவடைவோம் என அவனருளால் வாயார அவன் புகழைக் கூறிப் போற்றுவாராயினர்.

"பவள முண்டகக் கிழத்திதோய் பணைப்புயக் குரிசில்
தவள மேனியை நீனிற மாக்கிவெண் சலதி
துவள வந்தெழுங் கொடுவிட மிடற்றினிற் றூங்கக்
கவள மாக்குநின் பெருமையார் கணித்திட வல்லார்."

"சிரித்தெ ரித்தனை முப்புரம் திறற்சமன் வாழ்நாள்
இரித்த ழித்தனை யுதையினால் இலங்கையர்க் கிறையை
நெரித்து வீழ்த்தினை பெருவிரல் நுதியினில் நீறுப்
பொரித்து விட்டனை காமனைப் பொறி நுதல் விழியால்."

"பிரம னார்சிர முகிரினிற் பேதுறக் கொய்தாய்
சுரர்கள் யாரையுஞ் சிறுவிதி வேள்வியிற் றொலைத்தாய்
நரம டங்கன்மீன் வாமனன் கூர்ம நற்கேழல்
உரமெ லாமறத் தடிந்தனை யொவ்வொரு கூற்றால்."

"ஆந்த கன்றனை மாயனைச் சூலமீ தமைத்த
எந்தை நின்பெருந் தகைமையான் என்னறிந் திசைப்பேன்
சிந்தை மையலிற் றொழுத்தை யேன் செய்பிழை பொறுத்தே
உந்து பேரருட் கருணையா லுய்வகை யருளாய்."

என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் வார நாத்தழுதழுப்ப மெய்ம்மயிர் பொடிப்ப நெஞ்சம் நெக்கு நெக்குருகிப் போற்றித் துதித்துத் தாய்ப் பசுவைப் பிரிந்த பச்சிளங் கன்றெனக் கதறி யழுது இரந்து அலமருங் காலத்துக் கொன்றைவார் சடைக் குழகராகிய சிவபிரான் திருவருள் சுரந்து உமையொருபாகராய் விடைமீதேறி மூத்த பிள்ளையாரும் முருகவேளும் இருமருங்கும் அணுகிவரத், திருமாலுந் திசைமுகக் கடவுளும் திருவடியிணைகளைத் தாங்கிவர, விண்ணிற் குழுமியிருந்து தேவர்கள் கற்பக மலர் மாரிபொழிய, திக்குப்பாலகரெண்மரும் போற்றிவர, வட்ட வெண்குடையை நந்தியெம்பிரான் திருக்கரத்துத் தாங்க, உருத்திர கன்னியர் சாமரம் இரட்டப் பூதகணம் புடைசூழ்ந்துவரக் காட்சிதந்து அவ்வியாத முனிவரைப் பார்த்து, எவனை மதித்து எமது திருமுன்னர்ச் சூளுரைத்தனையோ அவன் எம்மடியிணை தாங்கி இதோ நிற்பதைக் காண்பாயாக. நீ அறியாமையால் அவ்வாறுரைத்தனை. எம்மைப் பரம்பொருளெனத் தேறாத ஒவ்வாச்சமயத்தோரெல்லாம் இவ்வாறே துன்புற்றுழல்வர். எமது உருவத்திருமேனியின் இடப்பால் வந்தவன் மாயோன். வலப்பால் வந்தோன் மலரோனவன். இவ்விருவரும் எப்படியாக் கடிமைத் திறம் பூண்டே அணுக்கத்தொண்டராயினர். கற்பங்கள் தோறும் கணக்கிலாப் பிரமரும், மாயரும பொன்றிய தலைகளைக் கோத்துத் தொங்கவிடப்பட்ட மாலைகளை நமது சென்னி, புயம், அரை, சரணம் ஆகிய விடங்களில் சிற்பத்திறம் விளங்க அணிந்துள்ளமையைக் கண்டறிவாயாக. மாண்ட விண்ணோர் எலும்பு மாலைகளையும் பிறவற்றையும் பூண்டது எற்றுக்கோவெனில், நின்போல்வார்க்குண்டாகும் மயக்கமற்றுதற்கும், அம்மாலயன் முதலியோருடைய அநித்தத்தன்மையான வாழ்வையும் எம்முடைய நித்தத்தன்மையையும் நின்போல்வாரறிந்து உய்வதற்குமேயன்றிப் பிறிதொன்றற் கன்று எனத் தெளிவாயாக. இனியேனும் மறைமுதற் பொருளாகிய எம்மையே பரம்பொருளெனத் தேறி நன்மை கூர் வழிபாடாற்றி முத்தியின்பம் பெற்றுய்வாயாகவெனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். வியாதர் இன்னலும் மயலும் நீங்கப்பெற்றவராய்ச் சிவபிரானை விதியுளிப் பூசையாற்றி வேண்டிய வரங்களைப் பெற்று வாழ்ந்தார்.

# இல்வாழ்க்கையும் மாதர்கடமையும்.

(திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள்.)

இல்வாழ்க்கை என்பது மனையாளோடுகூடி நடத்தும் வாழ்க்கையின் சிறப்புப் பெயரெனல் பொருந்தும். இவ்வில்லறமானது துறவறத்தைப் பிடித்து வாழ்வோர்க்குந் தோன்றாத் துணையாயிருப்பதாலும், இம்மை மறுமை ஆகிய இருவகை இன்பங்களையும் துய்த்து ஆனந்திப்பதற்கோர் கருவியாகவுளதாதலாலும் துறவறத்திலும் மேலானதாகவே கருதல்வேண்டும். ஆனால், அவ்வில்வாழ்க்கை சிறப்புறப் பலகாரணங்கள் உள்ளன. அவைகளில் முதலாவதும் முக்கியமானதுமாக விளங்குவது மாதர்தம் நல்லியல்புகளே. ஒருவனது இல்வாழ்க்கை சிறந்து விளங்கவேண்டுமெனின், அவன்றன் இல்லக்கிழத்தியும் அவனும் ஒரு வண்டியில் பூட்டப்பெற்ற பெற்றங்கள் போன்று ஒர்மையான மனப்பான்மையுடையவர்களாய் இல்லறம் என்னும் வண்டியை கணவன், நாயகி ஆகிய இருபெற்றங்களும் நடத்துதல் மிக மிக அவசியமாகும்.

"அன்பும் அறனு முடைத்தாயினில் வாழ்க்கை பண்பும் பயனுமது" என்று பொய்யில்மொழிப் புலவராய திருவள்ளுவர் கூறிப்போந்தவாறே இல்லக்கிழவன் தன் மனையாளிடத்து ஒருமனப்பட்ட அன்புடையவனும் மற்றவர்களிடம் அறந்த நம்பும் சிந்தையுடையவனும் வாழ்வானேயாயின் அவ்வில்வாழ்க்கையின் பயனை அவன் அடைந்தவன் ஆகின்றான். இன்றேல் அது பொய்வாழ்க்கையாகவே முடியும்.

ஒருவன் எவ்வளவு செல்வவானாயிருப்பினும், கல்வி கேள்விகளில் தேர்ந்தவனாக விளங்கினும் மனைவி நற்குண நற்செய்கைகளுடன் விளங்காவிடில் அவ்வில்லறம் மனக்களிப்பையும் இன்பத்தையும் தருவதன்றாம். இல்லக்கிழத்தியாகிய மனைவி அறவோர்களை உபசரித்தலும், விருந்தினரை மலர்ந்த முகத்துடன் வரவேற்றலும், ஏழை எளியவர்களிடத்துத் தயை செய்யுஞ் சிந்தையுடனிருத்தலும், ஆகிய நற்குணங்கள் உடையவளாக விருத்தல் அவசியம். இவைகளிலும் மேம்பட்ட குணமானது தன்கணவனுடைய வருவாய்க்கு ஏற்றபடி செலவுசெய்து வறுமை என்னும் பிணி அவனை அணுகாவண்ணம் பாதுகாப்பது. தன் கணவன் பெற்றுவரும் ஊதியம் மிகக் குறைவானதேயெனினும் அதை நிறைவாகக்கொண்டு, இல்லறம் வழுவாது குடும்பத்தை நடத்திவருதலே சாலச் சிறப்புடைத்தாம்.

ஒரு பெண் கல்வி கேள்விகளிற் சிறந்தோங்கியிருந்து உயர்ந்த உத்தியோகத்திலிருந்து அவள் வருவாயினின்று குடும்பம் நடத்துகின்றனளாயினும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களையும் உடையவளாய், தன்கொழுநன் மொழிக்கு மாறுமனமுடையவளாய் இருத்தலே அவளுடைய உயர்குடிப் பிறப்பையும் சீரிய ஒழுக்கத்தையும் விளக்கும் பளிங்காகும்.

ஒரு குடும்பம் நன்னிலை எய்துவது மட்டுமன்றி உத்தமப்பெண்மணிகளின் ஒத்துழைப்பால் ஒரு நாடே பெரும்பேறு பெறும் என்பதற்கையமில்லை. நற்குண நற்செய்கைகள், உயர்ந்த நோக்கம், தேசாபிமானம், பாஷாபிமானம் முதலிய பெருங்குணங்கள் நிறைந்த அன்னையினிடம் உதித்து, அவள்பால் அருந்தி அவளால் ஒன்றுமறியா இளம்பருவமுதல் வளர்க்கப்பட்டுவரும் சிறுவர்கள் அந்த நாட்டுச்சிறப்புக்கு இன்றியமையாச் செல்வங்களாக விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. (விகடகவி)

# கடவுளும் சமயமும்.

(சித்திரகுடி, திரு, து. முத்துவேல் கண்டரயர்.)

நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையாலாகிய இவ்வுலகில்வாழும் உயிர்கள் எண்ணிலாதன. அவைகள் என்றும் நின்று நிலவுவன; எடுத்த வுடல்கள் அவ்வைம்பூதங்களின் காரியங்கள். உடல் அழியுந் தன்மையது; அறிவித்தாலும் அறியாதது. அறிவற்றது. உயிர் அழிவில்லாதது; அறிவித்தால் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியுந் தன்மையது. அறிவற்ற உடலும் அறிவித்தாலறியும் உயிரும் ஒன்றாகக்கூடி இயங்குதல் கண்கூடு. அவ்வாறு, உடல் உயிரைக் கூட்டுவிக்கும் கடவுள் ஒருவர் உண்டு. அவர் என்றும் உள்ளவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர். உயிர்கட்கு வினைக்கீடான உடலையும் போகங்களை யநுபவித்தற்குரிய பொருள்களையும் அவரே யருளி உயிர்க்குயிராய் நின்று இயக்குகின்றனர். "எண்ணரிதாய் நித்தமாய் இருண் மலத்தினழுந்தி இருவினையின் றன்மைகளுக்கீடான யாக்கை, யண்ணலருளாலண்ணி" என்ற சிவப்பிரகாசம் இதனைவலியுறுத்தும். மும்மலப்பிணியால் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாக்கள் பிணி நீக்கம் எய்திப் பேரின்ப வீடெய்தற் பொருட்டே நின்மலனாகிய கடவுள் பேரருளால் உலகைத் தோற்றுவித்தருளுகின்றனர். ஓரறிவு முதல் ஐயறிவீறாகவுள்ள உயிர் வர்க்கங்களுள் மேலான பகுத்தறிவும் பெற்று ஆறறிவு வுடையதாய் விளங்கும் மக்கட்பிறப்பே சிறந்ததென்பதை 'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்யாதினும்அரிதரிதுகாண்'' என்று தாயுமானவரும் பிறரும்விளக்கிப் போந்தனர்.

உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று அறிவூட்டுகின்றவரே கடவுளாவர். அவரை ஆன்ம நாயகனாகக்கொண்டு அவரை வழிபடும் நெறியே சமயமாகும். ஐம்பொறி நுகர்ச்சி மாத்திரமன்றி ஆன்மவுணர்ச்சியும் பெற்று, சமயநெறிஒழுகும் மக்களுள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளையும் முறையே கைவரப்பெற்றவர்களே சத்திநிபாதத்து உத்தமர் எனப்படுவர். அருட் சத்தி பதிதலே சத்திநிபாதம் எனப்படும். உள்ளூற வொளித்தும் வெளிப்படத் தோன்றியும் குருவடிவு கொண்டும் கடவுள் அவரவர் பக்குவத்திற்கேற்றவாறு அருள் புரிகின்றனர். அங்ஙனம் அருள் புரியும் விதத்தை "மூவகையாருயிர்வர்க்க மலத்தார் கன்மமூமலத்தார் மூன்று முடையாரன்றே, தீவகமாமென வருவாய் வந்து நாதன்றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற், பாவனையான் மிகு நூலால் யோகப் பண்பால் பரவவருமவுத்திரியாற் பாசநாச,மேவ அருளுதவும்'' எனச்சிவப்பிரகாசம் கூறுகின்றது. ஆகவே பகுத்தறிவுடைய மக்கள் யாவரும் உலகமுதல்வராய் உலகாதீதராயுள்ள கடவுள் ஒருவர்உண்டென்பதையுணர்ந்து அவரைவழிபடும்நெறிமுறைகளைச்சமயச் சார்பில் நின்று சமயநூல்களைக் கற்றுத்தேர்ந்துவிதிமுறை வழிபாடாற்றிக் கடவுளும் சமயமும் தம்முயிரினும்சிறந்தனவாகவோம்புதல்வேண்டும். 'செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ மாலற நேயமலிந்தவர் வேடமும் ஆலயந்தானு மரனெனத் தொழுமே.' என்ற சிவஞான போதச் சூத்திரத்தை மறவாது சிந்தித்துக் குருலிங்க சங்கம பத்தியுடையவராய்க்குருவழிபாடும் ஆலயசேவையும் செய்து அடியார்திறத் தொழுகிக் கடவுளையும்சமயத்தையும் கைக்கொண்டு வாழ்வோமாக.



இத் தலத்தின் பெருமைகளை யெல்லாம் தனித்தனியே விரித்தெழுதப்புகின் மிக விரியுமாதலால் காசி காண்டம் முதலிய நூல்களில் கண்டு கொள்க.

காசிநகரத்தில் கங்கை நதிக்கரையிலுள்ள காசி என்னும் ஸ்டேஷனும், பனாரஸ் கண்டோன்மெண்ட் என்னும் ஸ்டேஷனுமே வசதி உள்ளதாகும். பிந்தாஜல் என்னும் ஸ்டேஷனிலிருந்து 51-மைல் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூபா ஒன்று. (E. I. R.) பிரயாகையிலிருந்து பிந்தாஜல் வாராமல் நேரே காசிக்குப்போவோர் வேறு வழியே 76-மைலில் போகலாம். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 1—5—0 B. N. W. இரயில்வே.

வசதி:— அநேக தருமசாலைகள் இருக்கின்றன. பண்டாக்களின் ஆட்கள் வந்து யாத்திரைவாசிகளிடம் தாங்கள்வசதிசெய்து தருவதாகச் சொல்லி அழைக்கிறார்கள். ஆனால் அவர்களிற் சிலர் யாத்திரை வாசிகளைப் பிடுங்கித் தின்னும் பேய்களாகவும் இருக்கிறார்கள். ஆதலின் தகுதி உடையவர்கள் என்று தெரிந்து தங்க வேண்டும். கேதார கட்டத்தில் குமாரசுவாமி மடம் திருப்பனந்தாள் மடத்தாருடைய மேல்பார்வையிலுள்ளது. அங்கு தமிழ் நாட்டார்கள் வசித்து வருவதால் வசதி உடையதாக இருக்கும். நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரமும் மிகப் பெரிதாக எல்லா வசதிகளையும் உடையதாய் விளங்குகிறது. ஆயினும் இவைகளில் தங்குவதற்கு திருப்பனந்தாள் மடத்திலிருந்தும் நகரத்தார்களிடமிருந்தும் கடிதம் பெற்றுவரவேண்டும். எல்லாருக்கும் இடந்தருவதென்கிற வழக்கம் இல்லை.

பாஷை:— காசியில் ஹிந்திபாஷை வழங்கப்படுகிறது. தமிழர்கள் யாத்திரையாக வந்து போவதனாலும் கேதார கட்டம் முதலிய இடங்களில் பெரும்பாலும் தமிழ்நாட்டாரே வசிப்பதனாலும் ஆங்காங்கு தமிழ்ப் பேசுபவர்களும் உண்டு. கேதார கட்டம் என்னும் இடத்தில் தமிழர்களே மிகுதியாக வசித்துவருகிறபடியால் தமிழ்நாடுபோலவே தோன்றும். இதுவன்றி வங்காளம், குஜராத்தி, பஞ்சாப், தெலுங்கு முதலிய பலபாஷைகளும் வழங்குவது உண்டு.

கங்கா நதி:— காசி நகருக்கே அணிகலனாகவும் பெருமை தருவதாகவும் மிகுந்த விசேஷமுடையதாகவும் விளங்குவது கங்காநதியாகும். கங்கையாறு பகீரதனால் இவ்வுலகத்திற்குக் கொண்டுவரப்பட்டது சிவபெருமானது சடாபாரத்திலிருந்து வருவது என்பது முதலான சரித்திரங்களைப் புராணங்களில் விரிவாகத் தெரிந்திருக்கலாம். கங்கா நதியை நேரிற் கண்டோர் அதன் பெருமையை நன்கு அறிவர். காசிப் பதியில் கங்கையாறு தெற்கிலிருந்து வடக்கே செல்லுகிறது. அது நேர் வடக்கின்றி வில் வளைவாக அதாவது கரையிலுள்ள அறுபத்துநான்கு கட்டங்களையும் எந்தக் கட்டத்திலிருந்து பார்த்தாலும் தெரியும்படியாக அமைந்து விளங்குகிறது. காசிகங்கையில் உள்ள அறுபத்து நான்குதீர்த்தக்கட்டங்களின் பெயர்கள் மற்றோர் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வறுபத்து நான்கு கட்டங்களிலும் ஸ்நானஞ் செய்ய இயலாதவர்கள் அவற்றுள் முக்கியமான ஐந்து தீர்த்தகட்டங்களில் முழுகலாம். அதன் விவரம் பஞ்ச தீர்த்தயாத்திரை என்ற பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. கங்கா நதிக்கு மிகுந்த பொருட் செலவில் இரயில்வே பாலம் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதன்றி வண்டிகள் பாதசாரிகள் மிருகங்கள் செல்ல மிதப்புப் பாலம் ஒன்றும் தனியே போடப்பட்டிருக்கிறது. காசியில் உள்ள மக்களிற் பலர் மாலை வேளைகளில் படகிலேறிக் கங்கையில் செலுத்திக்கொண்டு உல்லாசமாக நல்ல காற்று வாங்குகிறார்கள். கங்காநதியில் படகுகளும் சிறு ஸ்டீமர் என்னும் இயந்திரத் தோணிகளும்போய் வருகின்றன. கங்கைக் கரையில் மாலை வேளைகளில் புராணப் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. திரண்ட ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். கங்கா நதிக்கு மாலை வேளைகளில் பல தீர்த்த கட்டங்களில் பூசைசெய்யப் படுகிறது. வரும் ஜனங்கள் தீபம் ஏற்றிக்கங்கையில் விடுகிறார்கள். இக்காட்சிகளைக் காண்போருக்கு "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் அருண் மொழியின் வாய்மைநன்கு விளங்கும். கங்கைக் கரையில் மாலை வேளைகளில் ஒன்றுகூடும் ஜனத்திரளின் காட்சியையும் அங்கு கொண்டுவந்து வைக்கப்படும் பலவிதப் பொருள்களின் கடைகளும் மற்றச் செயற்கை அணிகளும் திகழும் காட்சியையும் சுருங்கக் கூறின் ஒரு பெரிய திருவிழாவையே ஒப்பிட்டுச் சொல்ல வேண்டும்.



கங்கையில் நீர் யானை முதலியவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆயினும் அவைகள் காசி எல்லைக்குள் மனிதர்கட்கு இடையூறு ஒன்றும் செய்வதில்லை. மாலைவேளைகளில் கரைகளில் இருந்து கங்கையைக் கவனித்துக்கொண்டிருந்தால் அவைகள் துள்ளி விழுவது தெரியும். கங்கை மிக ஆழமுடையதாய் உள்ளாகவே மிகு வேகமுடையதாய்ச் செல்லுகிறதாகச் சொல்லுகிறார்கள்.

## ஆலயங்கள் தீர்த்தங்கள்.

காசியாத்திரை விதியிற் கூறப்படும் தீர்த்தங்கள் ஆலயங்கள் எல்லாவற்றிலும் முழுகித் தெரிசனஞ் செய்வதற்கு நீண்டகால தாமதமும்; மிகுந்த பொருட் செலவும் வேண்டியிருப்பதால் எல்லாராலும் அவ்வாறு தங்கியிருந்து நிறைவேற்றுவதுமுடியாதகாரியம். எனவே, சௌகரியமாகக் காலதாமதமின்றிச் செய்யவேண்டிய முக்கியமான விவரங்களைக் கீழேகுறிக்கப்பட்டிருக்கிறது. அவரவர்கள் தங்கள், தங்கள் சக்திக்கேற்ற பொருட் செலவில் சுருக்கமாகவோ விரிவாகவோ செய்து முடித்துக்கொள்க.

I. கங்கா ஸ்நானம், விஸ்வநாதசுவாமி தெரிசனம்:— கங்கையில் மணிகர்ணிகா கட்டம் மிக விசேஷமுடையது. இந்தத் தீர்த்தக் கட்டத்திலும் அருகிலுள்ள சக்கர தீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்து விஸ்வநாதசுவாமி அன்னபூரணிதேவி, விசாலாக்ஷிதேவி, துண்டிவிநாயகர், சாக்ஷி விநாயகர், ஞானவாபி தெரிசனஞ் செய்தல்.

II. நித்தியயாத்திரை:— 1. விஸ்வேசம், 2. மாதவம், 3. துண்டி., 4. தண்டபாணி, 5. பைரவம், 6. வந்தேகாசி, 7. குகா, 8. கங்கா, 9. பவானி, 10. மணிகர்ணிகை என்னும் பத்து இடங்களிலும் தீர்த்தம் ஆடுதலும் தெரிசனஞ் செய்து வருதலுமாம்.

III. பஞ்சதீர்த்த யாத்திரை:— 1. அஸிசங்கம கட்டம், 2. தசாஸ்வமேத கட்டம், 3. வருணாசங்கம கட்டம், 4. பஞ்சகங்கா கட்டம், 5. மணிகர்ணிகை கட்டம், என்னும் ஐந்து கட்டங்களில் முழுகுவது.

## தக்ஷிண யாத்திரை.

IV. கேதார கட்டஞ்சென்று கங்காஸ்நானம், கௌரிகுண்ட ஸ்நானம் செய்து, கௌரி கேதாரேஸ்வரர் தெரிசனஞ்செய்து

கொண்டு அருகிலுள்ள அநுமந்தகட்டத்திலிருக்கும் அநுமார், சிந்தாமணி விநாயகர், திலபாண்டேசுரம், துர்க்காதேவி, கௌடிதேவி இவை முதலானவை தெரிசனம்.

V. சாதுக்கள் பிராமணர்கட்கு சக்திக்கியன்ற அளவில் சமாராதனை, கால பைரவருக்கு வடைமாலை நைவேத்யம், வியாச காசி தரிசனம், நாககூப தரிசனம் இயன்ற அளவில் விஸ்வநாத சுவாமி, அன்னபூரணி, விசாலாக்ஷிதேவி சந்நிதிகளில் அபிஷேக அர்ச்சனை, இவைகளனைத்தும் நாளுக்கொவ்வொன்றாகச் செய்து முடித்துக்கொள்ளலாம். மேற்சொன்ன யாத்திரைகளோடு அஷ்டபைரவர் யாத்திரை முதலியவைகளையும் சேர்த்து இருபத்துநான்கு யாத்திரை கூறப்பெறுகின்றன. இவைகளை விதிப்படி அமைதியாகச் செய்வதற்குப்பத்துமாத காலம் வேண்டுமெனக் கூறுகின்றனர். ஆதலின் அவரவர்கள் சௌகரியம்போல் ஏனையவற்றை விரித்தும், குறைத்தும் செய்து கொள்க.

## விஸ்வநாத சுவாமி தேரிசனம்.

விசுவநாதசுவாமி ஆலயம் மிகவும் சிறியதாகத் தோன்றும். கர்ப்பக்கிரகம் போன்று நான்கு புறமும் வாயில் உள்ள ஆலயத்தில் உட்பகுதியின் ஈசானபாகத்திலே சுமார் ஒவ்வொரு கஜ அகல நீளமுள்ள சமசதுர பள்ளமான வெள்ளித் தொட்டிக்குள் தங்கத்தகடு புனையப்பட்டுள்ள ஆவுடையாரோடு விஸ்வேஸ்வரப் பெருமான் இலிங்க ரூபமாக எழுந்தருளி விளங்குகிறார்.

இலிங்கம் அழகாகவும் மிக வழுவழுப்புள்ளதாகவும் மிளிர்கிறது. சுவாமி சிரமீது வடுப்போல ஒன்று தெரிகிறது. அதனைச் சிவபெருமான் அர்ச்சுனனோடு போர்செய்தகாலத்தில் அர்ச்சுனன் வில்லினால் அடித்த வடுவின் அடையாள அமைப்பாகுமென்று சொல்லுகிறார்கள். இலிங்கம், சுவாமி தேவி என்னும் இரண்டு பாகமாக விளங்குவதும் கூர்ந்து கவனித்தால் தெரியவரும்.

ஆலயத்தில் சுவாமியை எப்பொழுதும் பக்தகோடிகள் தீர்த்தத்தால் அபிஷேகித்து வில்வஞ் சாத்திப் பூசிப்பார்கள். எந்த நேரத்திலும் நெருக்கமான கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். தென்னாட்டைப் போலன்றி இந்நாட்டில் பக்தகோடிகள் தாமே விஸ்வநாதருக்கு அபிஷேகம் முதலியனசெய்து நன்றாய்ப் பூசிக்கலாம்.

186965

# செய்தித் திரட்டு.

திருப்பாதிரிப்புலியூர்:— ஸ்ரீ பெரியநாயகித் தாயார் சமேத ஸ்ரீ பாடலேசுவரருக்கு வழக்கம்போல் இவ்வாண்டும் வைகாசி உ௰௨ தொடங்கி ஆனி க௨வரை மகோற்சவம் மாண்புடன் நடைபெற்றது. தருமகர்த்தர்களான ஞானியார் மடாலய ஆதிபர் உயர்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமியவர்களும், வானூர் திரு, ர. இராமசாமி முதலியாரவர்களும் நன்கு நடத்திவைத்தார்கள்.

திருப்பாதிரிப்புலியூர்:— யோகச்சாமி யென்னும் நாகலிங்க சுவாமிகள் தனவணிக நகரத்தார்களின் பொருளுதவியால் ஒரு திருமடம் அமைத்து மூத்த பிள்ளையார் முருகவேள் நடராசப்பெருமான் அறுபத்து மூவர் ஆதியோரின் திருவுருவப்படங்கள் தாபித்து வைகாசி உ௯௨ திருமடாலயப் பிரவேசத்தைச் சிறப்பாகச் செய்தார்கள்.

வாளமர்கோட்டை:— ஸ்ரீ சௌந்தரநாயகி சமேத ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி ஆலயத்தைச் சுந்தர நாட்டார்கள் சீர்ணோத்தாரணஞ் செய்து நிறைவேற்றியுள்ளார்கள். ஆனி உ௬௨ வியாழக்கிழமை வளர்பிறைத் தசமி சுவாதிநாள் உதயாதி நாழிகை ௭௨-க்கு மேல் பத்தே முக்காலுக்குள் அஷ்டபந்தன மகா கும்பாபிடேகமும், அன்றிரவு ஐம்பெருங் கடவுளர் திருவுலாவுஞ் செய்யப்பெறுவதால் மெய்யன்பர்கள் வந்து தரிசிக்கத் திருமுகம் வழங்கி அழைக்கப் பெறுகின்றார்கள்.

புதுவை:— பாதபூஜை அம்பலத்தாடும் சுவாமிகளாகிய ஞானதேசிகரின் மகாகுருபூசை வழக்கம்போல் ஆனி ௭௨யும், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை இன்று மகநாளிலும் மகாபிடேக, அலங்கார, நைவேத்திய திருவாராதனைகளுடன் மகேசுவர பூசையும் செய்து நிறைவேறின.

தானக்குடி:— இத்தென்குடித்திட்டையின் ஈசானத்தில் வெட்டாற்று வடகரையின்கண் திருஞானசம்பந்தசுவாமிகள் மடாலயத்தில்வைகாசி ௲௨ மூலநாள் முற்பகல் குருபூசை மாகேசுவர பூசை அன்னதானம் ஆகிய செய்தும் பிற்பகல் தென்குடித்திட்டை சித்தாந்த வித்தியாசாலைத் தமிழாசிரியர் திரு, த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் 'தெய்வசிந்தனை' என்னும் பொருள்பற்றிய விரிவுரை நிகழ்த்துவித்தும், இரவு முத்துப் பல்லக்கில்சுவாமியையெழுந்தருளச்செய்தும், அடுத்தநாள்வித்துவான், திரு, க. ந மகாலிங்க முதலியாரவர்களால் திருஞானசம்பந்தர் சரித்திரம் பக்கத்தியங்களுடன் நடத்துவித்தும் கொண்டாடப்பெற்றது.

காசியாத்திரை:— பள்ளத்தூர் திருவாளர், மு. ராம. சொ. ராம. சுப்பிரமணியம் அவர்கள் அரித்துவாரஞ்சென்று கும்பமேளா தரிசித்துக் காசிக்கு வந்து முறையாக யாத்திரைகளை முடித்துக்கொண்டு ஊருக்கு வந்துள்ளார்கள்.

ஸ்ரீ அருணகிரிநாதர் குருபூசை:— இவ் ஆனி உ௭௨ மூலநாளன்று அன்பரனைவரும் குருபூசைசெய்து அடியவர்கட் கமுதருத்தி திருப்புகழை ஓதியும் ஓதுவித்தும் கொண்டாடவேண்டும்.

# சிவநேசன்.

**கண்டவராயன்பட்டி:—** ஸ்ரீ பணிச்சாநுடையவர் தருமகல சாலையின் 8வது ஆண்டு நிறைவுவிழா சென்னை திரு, R. P. சேதுப்பிள்ளையவர்கள் தலைமையில் வைகாசி உஎஉ விமரிசையாக நடைபெற்றது. இவ்வூர் நகரத்தார்கள் சிவாலயத்தின் மீது கொண்டுள்ள சிற்றத்தைச் சிறிது சிறிதாக ஆற்றிக் கொண்டு திருக்கோயிற் கதவு திறந்து சுவாமிகட்கு நாயதிப நைவேத்தியங் காட்டச்செய்யும் நாளை நன் முனாகப் திர்பார்க்கப்படுகிறது.

**கண்டமாணிக்கம்:—** மெ. பெரி. பெரி. சர்மகலாசாலையின் 26வது ஆண்டுநிறைவு வெள்ளிவிழா வைகாசி உஎஉ நேற்றுப்பை திருவாளர் பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் தலைமையிலும், அடுத்தநாள் மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையிலும் மாணவர்களின் நடிப்பு உரையாடல் முதலியவைகளுடனும், பண்டிதர்களின் அரியபெரிய விரிவுரைகளுடனும் வெகுவிமரிசையாக நடைபெற்று நிறைவேறியது.

**திருவத்திபுரம்:—** ஸ்ரீ பாநுகவிமாணவர்கழக 9வது ஆண்டுவிழா வைகாசி கூஉஉ திரு, கா. ர. கோவிந்தராசமுதலி யாரவர்கள் தலைமையில் அறிஞர்களின் பேருரைகளுடன் இனிது நடைபெற்றது.

**கோநகர்:—** ஸ்ரீ ஞானசம்பந்த நற்சபையின் உஉவது ஆண்டு நிறைவுவிழா வைகாசி கூஉ புதுவயல் திருவாளர் வெ. பெரி. வீர. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் தலைமையில் கற்பகவிநாயக கலாசாலையின் மாணவர்களின் உரையாடல்களுடனும் பெரியார்களின் அரிய விரிவுரைகளுடனும் இனிது நடைபெற்றது.

**ஓர் அநுதாபம்:—** தஞ்சை சைவ சித்தாந்த சபைத் தலைவர், ஸ்ரீ பா. சிவகுருநாதபிள்ளையவர்கள் வைகாசி கூஉ நண்பகல் இறைவன் திருவடி நீழலெய்தினர். கடவுயுடன்கருமக்கிரியைநிறைவேறியது. சைவசபைகூட்டி சைவங்களுக்குப் பசுமரத்தாணிபோற் பதியும்படிசைவப் பிரசங்கங்களைச் செய்து வந்த தக்கோராகிய இவர்களின் பிரிவு தஞ்சைமாநகர்வாசிகளுக்கும், சைவமெய்யன்பர்களுக்கும் ஆற்றொணாத் துயர் விளைப்பதாகும். என் செய்யலாம்? எல்லாம் ஈசன் செயலல்லவா? அவர்களின் ஆத்மா திருவருளின்பந் துய்க்கவும் அவர்களின் நன்மக்கள் அவர்கள் பெயர் விளங்கும்படி சிவத்தொண்டுசெய்து வீறுடன்விளங்கவும் பேரிறைவனைப்பிரார்த்திப்பதே நங்கடமையாகும்.

**இந்தியைப்பற்றிய செய்திகள்:—** சென்னை இந்தி எதிர்ப்புத் தலைவர் சுவாமி. அருணகிரிநாதருள்ளிட்ட நூறுபேர் வரையிலும் சிறை செய்யப் பெற்றுள்ளனராம்; இந்தி யெதிர்ப்புத்தலைமை நிலையத்தையப்புறப்படுத்த கார்பரேஷன் அறிவித்திருக்கிறதாம். எங்கட்குள்ள தமிழே போதும்; இந்தியும் வேண்டாம் வேறெதுவுமே வேண்டாமென்பதற்காகச் சிறைப்படுத்துவதுதான் சுயஆட்சியின் சுதந்தரம் போலும். தமிழ் நலத்துக்காகத் தன்னுடல் நலத்தையும் விடுத்து உயிரைத் தியாகஞ் செய்ய உண்ணாவிரதமிருப்பவர்களைக் கண்டாவது சுயஆட்சித் தலைவர்கள் இரங்கலாகாதா? என்னே! உலகப்போக்கு. தமிழ்த் தெய்வமே தமிழ்மக்களையும் தமிழ் நாட்டையும் தளராமற் காத்தருளவேண்டும்.

---

இட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. சு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.